# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 04 சனிக்கிழமை (18.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :111


# நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு விசேட பிரதிநிதியாக போவர் நியமனம்

## எரிக் சொல்ஹெய்மின் கீழ் செயற்படுவார் என அறிவிப்பு



போவர்

கொழும்பு, மார்ச்18

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சியில் நோர்வே வகிக்கும் அனுசரணைப் பணி தொடர்பாக அந்த நாட் டின் விசேட தூதுவராக ஜோன் ஹான்ஸன் போவர் (Jon Hanssen Bauer) நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த நியமனத்தைத் தாம் செய்திருக்கின்றார் என்றும், போவர் தமக்குக் கீழ் பணியாற்றுவார் என்றும், அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் எழுத்து மூலமாக அறிவித்திருக்கிறார்.

எரிக் சொல்ஹெய்மினால் இது தொடர்பாக தலைவர் பிரபாகரனுக்கு எழுதப்பட்ட கடிதம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சந்தித்த சமயம் தமிழ்ச்செல்வனிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கடிதத்தில் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ள முக்கிய தகவல்கள் வருமாறு -

அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் என்ற முறையில் இப் பணிக்கான விசேட தூதுவராக போவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் என் கீழ் பணியாற்றுவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் பேச்சுக்கு முன்பாக போவர் இலங்கைக்கு குறுகிய விஜயம்?

கொழும்பு,மார்ச் 18

இலங்கை அனுசரணைப் பணி தொடர்பாக நோர்வே நாட்டின் விசேட தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜோன் ஹான்ஸன் போவர் பெரும்பாலும் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்கு முன்னராக இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மின் கீழ் அனுசரணைப் பணியாற்றவுள்ள போவர் ஏப்ரல் 19ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன்னதாக இலங்கைக்கு குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என்று எதிர்பார்ப்பதாகவும் -

ஆனால் அப்படி ஒரு விஜயம் தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் -

நோர்வே தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகி உள்ளன.

(ஐ)

### 110 படையினருடன் பறந்த

## அமெ. போர் விமானம் கொழும்பில் அவசர அவசரமாகத் தரையிறக்கம்

கொழும்பு,மார்ச் 18

ஹவாயிலிருந்து மாலைதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த அமெரிக்கப் போர் விமானம் ஒன்று இடைவழியில் கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி போர் விமானம் 110 அமெரிக்க படையினருடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் தரையிறக்கப்பட்டதை இங்குள்ள அமெரிக்கத் தூதரகமும் உறுதிசெய்துள்ளது.

இந்த விமானம் ஹவாயிலிருந்து மாலைதீவின் மலேக்குச் சென்று கொண்டிருந்த போது விமானத்தின் முன்பகுதியில் புகைகக்கியதைத் தொடர்ந்தே இடைவழியில் அது இலங்கையில் தரையிறக்கப்பட்டதாக அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் ஈவன் ஓவென் தெரிவித்தார்.

(ஐ-க)

## நோர்வேக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச்18

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்டுவரும் நோர்வே அனுசரணையாளர்களை நாட்டைவிட்டு வெளியேறக் கோரும் ஆர்ப்பாட்டமொன்றை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மதியம் கொழும்பில் நடத்துவதற்கு தேசிய பிக்குகள் முன்னணி தீர்மானித்துள்ளது.

அன்றையதினம் கொழும்பு விகார மகாதேவி பூங்காவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. இதுகுறித்து ஏற்பாட்டாளரான

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் பாதுகாப்புடன் போராளி யாழ்.வைத்தியசாலைக்கு!

### மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் இராணுவப் பாதுகாப்புடன் முகமாலையில் இருந்து அழைத்து வரப்பட்டு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் எஸ்.அன்புச்செல்வன் (வயது 45) என்ற போராளி காயமடைந்திருந்தார். அவருக்கு மேலதிக சிகிச்சை வழங்கப்படவேண்டியிருந்தது. அதற்காக அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்ற வைத்தியர்கள் சிபாரிசு செய்தனர்.

போராளியை யாழ். வைத்தியசாலைக்கு மாற்றுவது குறித்து விடுதலைப் புலிகளின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி வவுனியா வருகை

கொழும்பு, மார்ச்18

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா வவுனியாவில் உள்ள வன்னிப் பிராந்திய இராணுவத் தலைமையகத்திற்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்டார்.

வவுனியாவில் உள்ள 216ஆவது படைப் பிரிவின் தலைமையகத்தில் இராணுவத்தினர் இராணுவத் தளபதியை வரவேற்பதற்கான வைபவரீதியான நிகழ்வு ஒன்றை அங்கு ஏற்பாடு செய்திருந்தனர். வன்னிப் பிராந்தியக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உபாலி எதிரிசிங்க தலைமையிலான முக்கிய அதிகாரிகள் குழுவினருடன் கலந்துரையாடி அப்பகுதி இராணுவ நிலைமைகள் தொடர்பாக சரத் பொன்சேகா கேட்டறிந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித் தடையை நீக்காவிட்டால் சிவில் நிர்வாகத்தை முடக்கத் திட்டம்

### 21ஆம் திகதி வரை அர்சுக்குக் காலக்கெடு

யாழ்ப்பாணம்,மார்ச்18

குடாநாட்டில் கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகளை வரும் மார்ச் 21ஆம் திகதிக்கு முன்பாக நீக்காவிட்டால் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை முடக்கும் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மீன்பிடித் தடை தொடர்பில் கடந்தவாரம் பேச்சு நடத்தினர்.

அப்பேச்சுக்களின்போது மீனவர்கள் மீதான தடை மறுநாளே நீக்கப்படும் என்று தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ, மீன்பிடித்தடை தொடர்பிலான அறிக்கையொன்றையும் விடுத்திருந்தார்.

ஆனால், குடாநாட்டில் மீன்பிடித்தடைக் கெடுபிடி தொடர்ந்துவருகின்றது.

இச் செயற்பாடு தொடர்பில் யாழ்., வடமராட்சி மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண பரீட்சை முடிவு 25ஆம் திகதியளவில்

கொழும்பு,மார்ச் 18

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சைக்கான பெறுபேறுகள் எதிர்வரும் 25ஆம் திகதியளவில் வெளியிடப்படவுள்ளன என பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மே மாதம் 22ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 15ஆம் திகதிவரை இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)

## திடீர் பொதுத்தேர்தல் குறித்து ஆராய்கின்றார் ஜனாதிபதி?

கொழும்பு,மார்ச் 18

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்துக்கான திடீர் பொதுத்தேர்தலும் இடம்பெறக்கூடும் என்று ஏஜென்ஸிச் செய்திகள் சில தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்தகையோடு - அதன் முடிவுகளைப் பொறுத்து - நாடாளுமன்றத்தில் தனது அரசாங்கத்தின் பெரும்பான்மையை உறுதிப்படுத்தும் முகமாக - பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தலாமா என்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு நெருக்கமானவர்களுடன் ஆராய்ந்து வருகிறார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

எனினும், திடீர் பொதுத்தேர்தல் நடக்கலாம் என்ற செய்திகளை அமைச்சர்களான டியூ குணசேகர மற்றும் நிமால் ஸ்ரீபால டி சில்வா ஆகியோர் மறுத்துரைத்துள்ளனர்.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறாது என அவர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## தமிழீழ சுகாதார சேவையின் பூச்சியியல் ஆய்வுப் பிரிவு

தமிழீழ சுகாதார சேவையின் பூச்சியியல் ஆய்வுப் பிரிவின் தொடக்க நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பூச்சியியல் பகுதி சிறப்பு நடவடிக்கை இணைப்பாளர் சிவகுமார் தலைமை வகித்தார்.

சிவகுமார் ஆற்றிய தலைமை உரை வருமாறு:-

தொற்று நோய்க்கான கிருமிகளை இனங்கண்டு அவற்றைத் தடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் இப்பிரிவு தொடங்கப்படுகிறது. தமிழீழ சுகாதார சேவையின் கீழ் ஏற்கனவே பூச்சியியல் பிரிவு செயற்பட்டு வந்தது. இருப்பினும் இன்று முதல் தமிழீழ சுகாதார சேவையின் கீழ் ஒரு தனிப் பிரிவாக இந்த சுகாதார சேவைகள் ஆய்வுப் பிரிவு செயற்படும் - என்று இணைப்பாளர் சிவகுமார் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)





சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர்களை பாடசாலை மாணவர்கள் மலர்மாலைகள் சூடி வரவேற்பதை முதல் படத்தில் காணலாம்.

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன திட்டப் பணிப்பாளர் ரூடி பன்கௌசர், கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் ஆகியோர் அடிக்கல் நடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : சாவகச்சேரி செய்தியாளர்)

## லண்டன் கார் விபத்தில் அல்வாய் வாசி பலி!

யாழ்ப்பாணம்,மார்ச் 18

லண்டனில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் அல்வாயைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த வீதி விபத்தில் மகேந்திரராசா மயூரன்(வயது42) என்பவரே சம்பவம் நடந்த இடத்தில் உயிரிழந்தார் என்று இங்கு தகவல் கிடைத்துள்ளது. இவருடன் காரில் ஒன்றாகப் பயணம் செய்த இன்னொருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. அவரது பெயர் விவரங்கள் கிடைக்கவில்லை. (ஐ-15)

## பாணின் விற்பனை விலை நிர்ணயம்

450 கிராம் பாணின் விற்பனை விலை இன்று தொடக்கம் 26 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

450 கிராம் எடை கொண்ட பாணின் ஆகக்கூடிய விற்பனை விலை 26 ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர்களுக்கு அறிவித்திருக்கின்றனர்.

பாணின் நிறையும் தரமும் பேணப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# ஜெனீவாப் பேச்சின் முடிவுகளை தாமதமின்றி செயற்படுத்துங்கள்!

### அரசுக்கும் புலிகளுக்கும் ஐ.தே. கட்சி வற்புறுத்தல்

கொழும்பு,மார்ச் 18

''தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையில் கடந்தவாரம் ஜெனீவாவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சின்போது எட்டப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

''அரசும், புலிகளும் உடனடியாக அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைவது என அரசு ஒத்துக்கொண்ட விடயம் மற்றும் புலிகளும் ஒத்துக்கொண்ட விடயங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

''அப்படி நடைமுறைப்படுத்தப்படாவிடின் அடுத்த கட்டப்பேச்சு நடைபெறுமா என்பது சந்தேகமே. இதை இருதரப்புமே கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.''

- இவ்வாறு ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைவதென அரசு ஜெனீவாப் பேச்சின்போது ஒத்துக்கொண்ட போதிலும், அதை அரசு இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நிலைமை எதிர்கால சமாதானப் பேச்சில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது :-

ஜெனீவாப் பேச்சின்போது எட்டப்பட்ட தீர்மானங்கள் எவை? ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடுகள் எவையென்பது எமக்குத் தெளிவாகத் தெரியாது. அரசு சொல்வதையே நாம் கேட்கிறோம்.

இந்த சமாதானப் பேச்சில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் திருத்தப்படவில்லை என இரு தரப்பினரும் முதலில் அறிவித்தனர். இல்லை அது திருத்தப்பட்டுள்ளது என அரசு தெரிவித்தது. அதன் பின்பு அதைத் திருத்தப்பட்டது என்றும் எடுத்துக்கொள்ளலாம், திருத்தப்படவில்லை என்றும் எடுத்துக்கொள்ளலாம், அவரவர் நோக்குநிலையைப் பொறுத்து அது அமையும் என அரசு தெரிவிக்கின்றது.

மொத்தத்தில் அரசு கூறுவதில் எது உண்மை எனக் கண்டுபிடிக்கமுடியாதுள்ளது. அதே போல் ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசு இணங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இல்லை அப்படியேதும் இணக்கம் காணப்படவில்லை என அரசு அதை மறுத்தாலும் வியப்பதற்கில்லை. ஏனென்றால் அரசு நேரத்துக்கு நேரம் தனது கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறது.

இவை தவிர இன்னும் என்னென்ன இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன, எவை எவையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டன என்பது யாருக்கும் தெரியாது.

ஏனென்றால், ஜெனீவாப் பேச்சுத் தொடர்பாக அரசு கூறியதெல்லாம் பொய்யே. இருப்பினும் ஒட்டுப்படைகளின் ஆயுதக் களைவு உட்பட என்னென்ன தீர்மானங்கள் எட்டப்பட்டனவோ அவை அனைத்தையும் இருதரப்பினரும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் அரசு மட்டுமோ அல்லது புலிகள் மட்டுமோ ஒருதரப்பாக நின்று எட்டப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்த முடியாது. இரு தரப்பினரும் பரஸ்பரம் செயற்பட வேண்டும்.

மாறாக, அசம்பாவிதங்கள் நடக்கின்ற போது அரசுமீது புலிகளும், புலிகள் மீது அரசும் மாறிமாறிக் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை.

அடுத்த கட்டப்பேச்சு நடைபெற வேண்டும் என்றால் எட்டப்பட்ட ஜெனீவாப் பேச்சின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டே ஆகவேண்டும்.

அவ்வாறு செய்யாது போனால் ஏற்படப் போகும் பின் விளைவுகள் அனைத்துக்கும் இருதரப்புமே பொறுப்பேற்க வேண்டும். இதை உணர்ந்து இருதரப்பும் செயற்படுவதே நல்லது. - எனக் கூறினார் அவர். (ஐ-க)

## பயன்படுத்த முடியாத 'கிற் கார்ட்டுகள்': பாவனையாளர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 18

'டயலொக்' தொலைபேசிப் பாவனையாளர்களால் பயன்படுத்தப்படும் 'கிற் கார்ட்' (Kit card)களில் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்று பாவனையாளர்கள் தரப்பில் முறையிடப்படுகிறது.

பாவனையில் இல்லாத இலக்கங்களைக் கொண்ட பல 'கிற் கார்ட்டுகள்' யாழ்.நகரப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்பது தெரியவந்திருக்கிறது. 'கிற் கார்டு'களை வாங்கி இலக்கங்களைப் பதிவு செய்த பலர் அந்த இலக்கங்கள் பாவனையில் இல்லாது இருப்பது கண்டு ஏமாற்றமடைந்துள்ளனர்.

யாழ்.நகரப் பகுதியில் உள்ள மருந்தகம் ஒன்றில் 'கிற் கார்ட்' வாங்கிய பாவனையாளர் ஒருவர் அது பாவனைக்கு செல்லுபடியற்றதாக இருப்பது கண்டு 'டயலொக்' நிறுவனத்தில் முறையிட்டிருக்கிறார்.

கடைகளில் இடம்பெறும் திருட்டுக்களின் போது அபகரிக்கப்படும் 'கிற் கார்டு'களே இவ்வாறு பயன்பாட்டில் இருந்து நீக்கப்படுகின்றன என்றும் -

திருடப்பட்டவை என்று முறையிடப்படும் 'கிற் கார்ட்டு'களின் இலக்கங்கள் தொலைபேசி வலையமைப்பில் இருந்து நீக்கப்பட்டுவிடுகின்றன என்றும் -

'டயலொக்' நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய 'காட்டு'கள் முறையற்ற விதத்தில் வாங்கி விற்பனை செய்யப்படுகின்றன. பாவனையாளர்கள் இது குறித்து விழிப்புடன் இருக்கவேண்டும் என்று 'டயலொக்' நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## கடத்தல்கள், தாக்குதல்களைக் கண்டித்து மட்டு. மாவட்டத்தில் நேற்று ஹர்த்தால்

ஏறாவூர்,மார்ச் 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மாணவர் கடத்தல் சம்பவங்கள் மற்றும் பொது மக்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றைக் கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கிழக் கில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்புநிலை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள், பொதுச் சந்தைகள்,பாடசாலைகள் என்பன மூடப்பட்டிருந்தன. உள்ளூர்ப் போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.

கடந்த மூன்று தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த புதன்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பஸ் டிப்போ ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் ஆசிரியர்களின் சுகவீன லீவுப் போராட்டம் என்பவற்றினால் கடந்த வியாழக்கிழமையும் வழமை நிலை பாதிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரிலும், ஏனைய பிரதேசங்களிலும் பொலீஸாரும், இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் கூட்டாக இணைந்து ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (உ)

## சலரோகம் தொடர்பான விவரணத் தொகுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 18

சலரோக நோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான விவரணத் தொகுப்பு இறுவட்டின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரின் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.எ.ஞானசோதி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுவட்டின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பெற்றுக்கொள்வார்.

இறுவட்டின் விமர்சன உரையினை பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார்.

யாழ். மருத்துவ பீடத்தின் 23ஆவது அணியின் குழு -3 ஐச் சேர்ந்தவர்கள் வைத்திய் கலாநிதி எஸ்.சிவன்சுதனின் வழிகாட்டலில் இந்த இறுவட்டினை உருவாக்கியுள்ளனர். (ஐ-13)

## மர்ம விலங்கினால் கோழிகள், ஆடுகள் கொல்லப்படுகின்றன

அச்செழுப் பகுதியில் வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகள் மற்றும் ஆடுகள் போன்ற கால்நடைகள் இரவு நேரங்களில் கொல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இனந்தெரியாத விலங்கு ஒன்று இந்தக் கால்நடைகளைக் கடித்துக் கொல்கின்றது என்று அப்பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

இரவுவேளைகளில் சத்தம் சந்தடி இன்றி வரும் இந்த விலங்கு கோழிகள் மற்றும் ஆடுகளைக் கடித்துக் கொல்கின்றது. இறந்த உடல்களை அவ்விடங்களிலேயே கைவிட்டுச் செல்கின்றது. இந்த விலங்கு கோழிகள் மற்றும் ஆடுகளின் குருதியை உறிஞ்சுகின்றது என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். பெரும் எண்ணிக்கையான கோழிகளும் இருபதுக்கும் மேற்பட்ட ஆடுகளும் இந்த விலங்கினால் கொல்லப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அசைக்க முடியாத சொல்ஹெய்ம்

*"இலங்கை இனப்பிரச்சினை நெருக்கடியில் ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியாத நிலையில் தனது பணிகளைத் தொடர்ந்து செய்வதில் அர்த்தம் இல்லை என்று கருதி அதிலிருந்து எரிக் சொல்ஹெய்ம் விலகி விட்டார்."* - இப்படி மேற்குல மற்றும் தென்னிலங்கை ஊடகங்கள் நேற்று முன்தினமும் நேற்றும் விழுந்தடித்துக் கொண்டு செய்திகளை வெளியிட்டன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை-குறிப்பாக அதன் அனுசரணைப் பணிப் பொறுப்பாளர் எரிக் சொல்ஹெய்மை - விலக்கவேண்டும் என்று தென்னிலங்கையில் சிங்கள - பௌத்த பேரினவாதிகளும் அவர்களின் ஊதுகுழல்களான ஊடகங்களும் கூக்குரல் எழுப்பி வருகையில், இந்தத் தகவல் அத்தரப்பினர் அனைவருக்கும் 'வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாக' போட்டு மெல்லுவதற்கு வாய்த்துவிட்டது.

ஆனால், அப்படி ஒன்றும் அனுசரணைப் பொறுப்பிலிருந்து எரிக் சொல்ஹெய்ம் விலகவில்லை என்பதே உண்மை.

இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதிப் பேச்சுகளுக்குப் புத்துயிரூட்டுவதற்கு இலங்கையின் புதிய அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசுத் தரப்பினரும் தீர்மானித்த போது, அதுவரை அனுசரணைப் பணியில் விசேட பிரதிநிதியாகப் பங்குபற்றி வந்த எரிக் சொல்ஹெய்ம், அந்த நாட்டின் அமைச்சராகவும் பதவி நிலை உயர்ந்திருந்தார். இக்காரணத்தினால் இலங்கை விவகாரத்தில் அனுசரணைப் பணியைத் தனித்து - முழுமையாக - முன்னெடுப்பது அவரால் இயலாத விடயம் என்றும், அதற்காக நேரம் ஒதுக்குவது அவருக்குக் கஷ்டமாக இருக்கும் என்றும் அப்போதே தெரிவிக்கப்பட்டது. எனினும், அனுசரணைப் பணிக்குப் பொறுப்பாக அவரே இருப்பார், தமக்குக் கீழ் இப்பணியை முன்னெடுப்பதற்கு தமது பிரதிநிதி ஒருவரை அவர் நியமித்து அறிவிப்பார் என்று நோர்வேயின் புதிய அரசு பிரகடனப்படுத்தியிருந்தது. அந்த முடிவையே இப்போது செயற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றார் சொல்ஹெய்ம். தமது சார்பில் - தமது பிரதிநிதியாக - செயற்படுவதற்கு ஒருவரை நியமிக்க அவர் முடிவு செய்திருக்கின்றார். அவ்வளவே.

அதைத்தான் இவ்வாறு திசை திருப்பி - கதைமாற்றி - பூதாகாரப்படுத்தி - அனுசரணைப் பணியிலிருந்து சொல்ஹெய்ம் விலகுகின்றார் என்று புளுகை அவிழ்த்து விட்டிருக்கின்றன சில தரப்புக்கள்.

எரிக் சொல்ஹெய்ம் அவரது நோர்வே நாட்டின் அமைச்சராக இல்லாத காலத்தில் கூட இலங்கைக்கான அனுசரணைப் பணியில் முக்கிய பிரதிநிதியாக இருந்திருக்கிறார். அப்போதும் கூட அவரை அந்தப் பொறுப்பிலிருந்து அகற்ற பல முயற்சிகள் இலங்கைத் தரப்பிலிருந்து - அரசுத் தலைமை மட்டத்திலிருந்து கூட - எடுக்கப்பட்டன. ஆனால், அவை எவையுமே பலிக்கவில்லை என்பதுதான் சரித்திரம்.

"எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு சார்பாகச் செயற்படுகிறார், அவரை நீக்கிவிட்டு அப்பணிக்கு வேறு ஒருவரை நியமியுங்கள்" - என்று முன்னர் இலங்கை ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவும் அவரது வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமரும், அவர்களது அரசின் ஏனைய மூத்த பல உறுப்பினர்களும் நோர்வேயை வற்புறுத்தினர். அப்போது நோர்வே அரசில் - இப்போது இருப்பது போல - சொல்ஹெய்ம் சார்பான அரசியல் தலைமை இருக்கவில்லை. சொல்ஹெய்மின் கட்சியும் கூட நோர்வேயில் அந்த நாட்டு அரசுக்கு எதிர்த்தரப்பில், எதிர்க்கட்சிகளின் வரிசையில்தான் இருந்தது. அப்படியிருந்தும் கூட - அவ்வேளையில் தானும் - சொல்ஹெய்மை அப் பொறுப்பிலிருந்து இலங்கை அரசால் வெளியேற்ற முடியவில்லை. அப்போதைய இலங்கை அரசுத் தலைமையைச் சமாளிப்பதற்காக - ஒரு பேச்சுக்கு - கண்துடைப்பதற்கு - சொல்ஹெய்முக்கு மேலதிகமாக அனுசரணைப் பணிக்குப் பொறுப்பாக அந்த நாட்டின் அப்போதைய பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனை நியமித்ததோடு விட்டுவிட்டது அப்போதைய நோர்வே அரசு.

அதற்குப் பின்னர் எரிக்சொல்ஹெய்மை மட்டுமல்ல, அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயையே இந்தப் பொறுப்பிலிருந்து வெளியேற்ற ஜனாதிபதி குமாரதுங்க முயற்சித்தார்.

அந்த எத்தனம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக் காலத்தில் - அவரது அரசு அமைதி முயற்சிகளை மேற்கொண்டிருந்த சமயத்தில் - ஒரு தடவை இடம்பெற்றது.

நோர்வேக்குப் பதிலாக பின்லாந்திடம் இந்த அனுசரணைப் பொறுப்பைக் கையளிக்க விரும்பிய அப்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சந்திரிகா, அது குறித்து முன்னாள் பின்லாந்து பிரதமர் மார்ட்டி அஹிட்சாரியுடன் பேசினார். அந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை.

பின்னர் மீண்டும் தமது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்திலும் ஒரு தடவை சந்திரிகா நோர்வேயை வெட்டிவிட்டு ஐ.நாவை இப்பணிக்குள் இழுத்து வீழ்த்த முயன்றார். ஐ.நா. பொதுச் செயலாளரின் விசேட தூதுவர் லக்தார் பிராமியை இதற்காக அவர் அழைத்தார். ஆனால், அதுவும் சரிவரவில்லை.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட தாம் அதிகாரத்தை ஏற்ற கையோடு நோர்வேயை வெட்டி ஓடத்தான் பார்த்தார். பதவி ஏற்ற சமயத்திலும் அதன் பின்னரும் அவர் ஆற்றிய பகிரங்க உரைகள், வழங்கிய செவ்விகள் போன்றவை இதனை உறுதிப்படுத்தும்.

நோர்வேயை ஓரம் கட்டுவதோ, சொல்ஹெய்ம்மை அகற்றுவதோ தென்னிலங்கைக்கு வாய்க்கப் போகின்ற விடயங்கள் அல்ல. அதனை விடுத்து நோர்வேயினதும், எரிக் சொல்ஹெய்மினதும் பெறுமதிமிக்க - உயர்ந்த - பங்களிப்பை தேர்ந்த முறையில் பயன்படுத்தி எவ்வாறு இலங்கை இனப் பிரச்சினைக்கு நீதியான - நியாயமான - நிலைத்து நின்று பிடிக்கக்கூடிய - நிரந்தர - அமைதித் தீர்வு ஒன்றையும் காண்பது என்று சிந்தித்து, அதன்வழி ஆக்கபூர்வமாகச் செயற்படுவது நல்ல உபாயமாகும். தென்னிலங்கைத் தரப்புக்கு இந்த ஆலோசனை சமர்ப்பணம்.

# ஆள்கொணர்வு வழக்குகளின் எதிர்மனுதாரரான கோப்ரல் ராஜபக்ஷவை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பான ஆள்கொணர்வு வழக்கில் முக்கிய எதிர் மனுதாரரான மரண தண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை மே மாதம் 18ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யவேண்டும் என்று யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

குருநகர் பகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் இடம்பெற்ற போதே மேற்கண்ட உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

கடந்த திங்கட்கிழமை முதல் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பல ஆள்கொணர்வு மனுக்களில் எதிர் மனுதாரராகவும் முக்கிய சாட்சியாகவும் குறிப்பிடப்பட்டிருந்த கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றில் ஆஜராகவில்லை.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அவரை அழைத்து வருவதற்கான போக்குவரத்தை ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவர் ஆஜராக முடியாது போனதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள விசாரணைகளின்போது இவர் நீதிமன்றில் பிரசன்னமாக இருக்க வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் எடுக்கவேண்டுமெனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த சிறைச்சாலை ஆணையாளர் றூமி மர்சூக்கிற்கு இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர் உடனடியாக வெலிக்கடைச் சிறைச்சாலையுடன் தொடர்புகொண்டு அடுத்த தவணையின் போது ராஜபக்ஷ நீதிமன்றில் ஆஜராவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். (3-203)

## இருதயநோயினால் பாதிக்கப்பட்டவரின் சத்திரசிகிச்சைக்கு ரூ. ஒரு லட்சம் அன்பளிப்பு

### யுவதி ஒருவரின் முன்மாதிரியான செயற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்18

நீண்டகாலமாக இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவருக்கு இருதய சத்திர சிகிச்சை செய்வதற்கென செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி என்பவர் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தை யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சை பிரிவினூடாக அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதனையடுத்து பொருளாதார வசதியின்மை காரணமாக நீண்டகாலமாகத் தடைப்பட்டிருந்த இருதய சத்திரசிகிச்சைக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நோயாளி ஒருவரின் உயிர்காக்க உதவிய இந்த இளம் பெண்ணை மனமாரப் பாராட்டும் அதேவேளை, இது போன்ற வசதிக்குறைவு காரணமாக சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கும் பல நோயாளர்களின் உயிர்காக்க வசதியுள்ளவர்கள் அன்பளிப்பை வழங்கி அவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும் என்றும் -

யாழ். போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சை நிலைய இருதய நோய்ச் சிகிச்சை நிபுணருடன் இது விடயமாகத் தொடர்புகொள்ள முடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-15)

## தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையிலான கருத்தரங்குகள் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகரசபை, வலி.தென்மேற்குப் பிரதேச சபை வேட்பாளர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெற்றது.

இந்தப் பிரதேச சபைப் பிரசாரங்களுக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு தேர்தல் பிரசாரப் பணிகள் தொடர்பாக ஆராய்ந்து பணிகளை வேட்பாளர்களுக்குப் பகிர்ந்தளித்தனர்.

இதேவேளை, வலி.வடக்கு, வலி.தெற்குப் பகுதிப் பிரதேச சபைகளில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலொன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு 18/9, மாட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. வேட்பாளர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதேவேளை - வடமராட்சியிலும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடபட்டு வருகின்றனர். (3-203-70)

## ஒத்திவைப்பு

அச்சுவேலி,மார்ச்18

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மாங்குளம் பகுதிகளில் நடத்தப்படவிருந்த அதிபர் சேவைப் பரீட்சைக்கான வழிப்படுத்தல் கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கருத்தரங்கு தொடர்பான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன் அறிவித்துள்ளார். (எ-11)

## ஆள்கொணர்வு வழக்கில் ஆஜராக கொழும்பிலிருந்து சிரேஷ்ட அரச சட்டவாதி

யாழ்ப்பாணம்,மார்ச்18

குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு விசாரணையில் படைத்தரப்பு மற்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராவதற்கு கொழும்பிலிருந்து சிரேஷ்ட அரச சட்டவாதி வரவிருக்கிறார்.

யாழ். நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டுவரும் ஆள்கொணர்வு மனுக்களின் மனுதாரர்களின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அவர்களைக் குறுக்கு விசாரணை செய்வதற்காகக் கொழும்பிலிருந்து சிரேஷ்ட அரச சட்டவாதி சமுகமளிக்க வேண்டியுள்ளது என்றும் -

அதற்கு வசதியாக வழக்கை ஒத்திவைக்குமாறும் - அரச சட்டவாதியான எஸ்.சூசைதாசன் யாழ். நீதிமன்றைக் கேட்டிருந்தார்.

இக்கோரிக்கையை ஏற்று மே மாதம் 18ஆம் திகதி வழக்கை யாழ். நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஒத்திவைத்தார்.


அன்றையதினம் விசாரணைகளில் படைத்தரப்பு மற்றும் சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டவாதி மனுதாரர்களைக் குறுக்கு விசாரணை செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (3-203)

### நாளை

பங்குனி 05
ஞாயிற்றுக்கிழமை
19.03.2006
திதி : சதுர்த்தி
முற்பகல் 10.35
நட்சத்திரம் : விசாகம்
முழுவதும்
சுபநேரம் : 09.18 - 10.48
ராகுகாலம் : 04.48 - 06.18
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடவுள் நம்பிக்கை ஒன்றே உன்னை நல்லவனாக்கிவிடும்.
- ஓர் அறிஞர்



## துன்பம் தீர அருள்வாக்கு

துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்மன் ஆலயம் பெர்ணாந்து வீதி, கொழும்பு-6, ஞானகணேஸ்வரி அம்மா யாழ்.மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதற்காக 18-03-2006 இலிருந்து 20ஆம் திகதிவரை அருள்வாக்கு கூறவுள்ளார். குழந்தையில்லாதவர்கள், திருமணத்தடை, தோசம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டுத் தடை, தொழில்தடை, நோயாளர்கள், கல்வி முன்னேற்றம் அனைத்திற்கும் திருநீற்றினால் துன்பம் தீர்க்கும் அம்மாவின் அருளையும் ஆசியையும் பெறவிரும்பும் அடியார்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**ஞானவைரவர் ஆலயம்,**
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை, (48213)
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (26.15.45)



## கூறுவிலை கோருதல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள உருக்கு, மரத்தளபாடங்களை (கட்டில், மேசை, கதிரை முதலியன) துப்புரவு செய்து மைபூசுவதற்காக தகைமையுள்ள நிறுவனங்கள் தனியாரிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. முடிவுதிகதி 03-04-2006 முற்பகல்10 மணி. மேலதிக விவரங்களுக்கு வைத்தியசாலை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

வைத்திய கலாநிதி **அ.எ.ஞானஜோதி,**
பணிப்பாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.
(26.15.45) (சி-148401)



## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

**ஒரு மாதத்தில் பிரயாணம்**

* டோகா, கட்டார், டுபாய்

தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைண்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி, OFFICE BOY, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதிசுமப்போர் (PORTERS)

* மலேசியாவில்

ஆண்/பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலைவாய்ப்பு. சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொதுவேலை, துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்.

தொடர்பு:

**RAINBOW TRAVELS and TOURS**
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777 328219, 021-222 3237
(சி/48386)(32-15-45)



## போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு நிர்வாகப் பணிநிலைக்கான நேர்முகத் தேர்வு

★ கீழ்க் குறிப்பிடப்பட்ட நாளில் நேர்முகத்தேர்வு நடைபெறும்.
★ இத் தேர்வுக்கு தகைமை உடையோர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதியுடன் சமுகம் தரவும்.
  * கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
  * பிறதகைமைச் சான்றிதழ்கள்
  * குடும்பப் பதிவு அட்டை
★ இதுவரை வேண்டுகை அனுப்பாதவர்களும் தங்களது தனி வரலாறு (சுயவிவரம்) வேண்டுகைகளுடன் இந்த நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரலாம்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**

நாள்: 21-03-2006
நேரம்: முற்பகல் 9 பிற்பகல் 3 மணிவரை
இடம்: நடுவப்பணியகம், போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, கிளிநொச்சி.

ஆளணிப்பகுதி,
நடுவப்பணியகம்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,
கிளிநொச்சி.
(சி/48406)(26.15.45)


## உதவிப்பணம் பெறுவோர் விவரம் மீளாய்வு

தென்மராட்சி, மார்ச் 18

சாவகச்சேரி நகர், கல்வயல் ஆகிய பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் விவரங்கள் எதிர்வரும் 21ஆம் திகதி செய்வாய்க்கிழமை மீளாய்வு செய்யப்படவுள்ளன.

பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவு உத்தியோகத்தர்கள் மீளாய்வில் ஈடுபடவுள்ளனர்.

21ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கல்வயல் கிராம அலுவலர் அலுவலகத்திலும், பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரிநகர் கிராம அலுவலர் அலுவலகத்திலும் மீளாய்வு இடம்பெறும்.

உதவிப்பணம் பெறுவோர் தமது குடும்ப பங்கீட்டு அட்டை, கொடுப்பனவு அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

## மகளிர்தின விழாவும் மனைப்பொருள் காட்சியும்

யாழ்ப்பாணம், மார்ச்18

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு நடத்தும் அனைத்துலக பெண்கள்தின விழாவும் மனைப்பொருளியல் பொருள்காட்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழுவின் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் பாக்கியலக்சுமி நடராசா முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் பொ.கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான பொ.சிவலிங்கம், சி.ஐயாத்துரை, த.கந்தசாமி ஆகியோரும் கலந்து கொள்வர். (எ-202)

## மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச்18

கிராமிய அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு, திருநெல்வேலி மத்தி, வடக்கில் 2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெறவுள்ள இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் கலந்துகொள்வார். (3-14-86)


## தேவை

போட்டோப்பிரதி, தொலைபேசி இயக்குநர் பதவிக்காக பெண்கள் தேவை. 20.03.2006 இற்கு முன்னர் நேரில் வரவும். பழக விரும்புபவர்களும் சமுக மளிக்கலாம்.

**சன்லைற் றைக்கிளினர்ஸ்,**
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(48150) தொ.பே: 222 9467. (32.26.15.45)



## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம் சேவைக்கு

★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளைக் கொண்டது.
★ 1000 பேர் ஒரே நேரத்தில் கதிரையில் அமர்ந்து கண்டுகளிக்கலாம்
★ 300 பேர் ஒரேநேரத்தில் கதிரை மேசைகளில் இருந்து உண்டுமகிழலாம்
★ குளிரூட்டப்பட்ட திருமணக் கார் - வீடியோ, போட்டோ வசதிகள்
★ விசேடமாக கேரளத்தில் (இந்தியா) இருந்து வரவழைக்கப்பட்ட சமையல்காரர்களால் தயாரிக்கப்பட்ட உணவுவகைகளை விரும்பம் போல உண்டுமகிழக் கூடியவசதி
★ தனித்துவமான மேடை ஒழுங்குகள், இசை நிகழ்வுகள்

**திருமண வைபவங்கள் பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் வைபவங்களுக்கு முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.**

**வீடியோ கலாமினி அச்சுவேலி**
0602212431 0773053080
(சி/48405)(26.15.45)



## அன்னை நாகா பூட்சிற்றி

தனது

மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

**மார்ச் 19 முதல் மே 30 வரை**

விசேட சலுகைகள் வழங்குகின்றது.




இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்
நீங்களும் ஒரு அதிர்ஷ்டசாலியாகுங்கள்..........



வெற்றிகரமாக 3வது ஆண்டை நிறைவு செய்து 4வது ஆண்டில் காலடி பதிக்கும் இத்தருணத்தில் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

Annai Nagaa Food City




**உங்கள் தினசரி தேவைகளை ஒரே கூரையின் கீழ் பூர்த்தி செய்ய இன்றே நாடுங்கள்**

அன்னை நாகா பூட்சிற்றி No. 175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P. 2225515



## INTERNATIONAL SCHOOL MANIPAY

## சர்வதேச பாடசாலை மானிப்பாய்

INTERNATIONAL SCHOOL MANIPAY · In God we trust · SCHOOL WITH A DIFFERENCE · Innovative

| OPENING CEREMONY | திறப்பு விழா |
|---|---|
| 26-03-2006 at 3.30P.M. | 26-03-2006 மாலை 3.30 |

நண்பர்கள், அன்பர்கள், விசுவாசிகள், ஆர்வமுள்ளோர்
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்

## சண்டிலிப்பாய் இந்துவில் புதிய பெயர் வளைவு

யாழ்ப்பாணம்,மார்ச்18

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் புதிய பெயர் வளைவு நேற்று திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

இந்தப் புதிய பெயர் வளைவினை அமைப்பதற்குக் கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துவருபவருமான எஸ்.தயாபரன் 30 ஆயிரம் ரூபா நிதியுதவியினை வழங்கியிருந்தார் என்று அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தெரிவித்தார். (எ-13)

# வடமராட்சி, மருதங்கேணி பாடசாலைகளில் ரூ.4 கோடி 95 லட்சம் செலவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,மார்ச்18

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளின் அபிவிருத்திக்கென சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் 4 கோடியே 95 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரிக்கு ஒரு கோடியே 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு 63 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கலட்டி றோ.க.த.க. பாடசாலைக்கு 44 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் -

வடமராட்சி கிழக்கில் மாமுனை அ.த.க. பாடசாலைக்கு ஒரு கோடியே 11 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு 64 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கேவில் அ.த. க. பாடசாலைக்கு 46 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இந்த நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு திட்டமிடல் ஒருங்கிணைப்புச் செயலகத்தில் யாழ். மாவட்டத் திட்டமிடற் செயலகப் பொறுப்பாளர் சு.பாலையா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில் பாடசாலை அதிபர்களும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.


இந்தக் கலந்துரையாடலில் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகியவற்றின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் -

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஏனைய பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவன நிர்வாக முகாமையாளர் எ.கொ[illegible]ன், பணிப்பாளர் றுடோல் பங்சார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த வருட இறுதிக்குள் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள் யாவும் நிறைவுசெய்யப்படவேண்டும் என இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ-203)





வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்துக்கென நோர்வேயின் உதவியுடன் 'கோஸ்ரல் கொம்பைன்ஸ்' நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள படகுத் தொழிற்சாலைக்கான அடிக்கல்நடும் விழா அண்மையில் நடைபெற்றது. 'கோஸ்ரல் கொம்பைன்ஸ்' நிறுவனத் தலைவர் குணார் அல்பம் அடிக்கல் நடுவதை முதலாவது படத்திலும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசப் பிரதிநிதிகள், கிரியைகளை மேற்கொண்ட சிவஸ்ரீ க.இராசையாக் குருக்கள் 'கோஸ்ரல் கொம்பைன்ஸ்' நிறுவனத் தலைவர் குணார் அல்பம், உறுப்பினர் அரவிட் சொல்ஹெய்ம், இணைப்பாளர் எஸ்.தர்மசீலன் ஆகியோர் படகுத் தொழிற்சாலை நிறுவப்படும் இடத்தைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: வடமராட்சிச் செய்தியாளர்)

## தொல்புரம் பாடசாலைக்கு சுற்றுமதில் அமைப்பு

தொல்புரம்,மார்ச்18

தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை வளாகத்தைச் சுற்றி புதிதாக சுற்றுமதில் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் இந்தச் சுற்றுமதில் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுள்ளன என்று பாடசாலை அதிபர் வ.பரமேஸ்வரபிள்ளை தெரிவித்தார்.(எ-119)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.இசற். உதவியுடன் 60 வீடுகள்

கோப்பாய்,மார்ச்18

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 6 கிராம அலுவலர் பிரிவுகளில் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான 60 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஜி.ரி.இசற். நிறுவனத்தின் ஆதரவுடன் இவை நிர்மாணிக்கப்படவுள்ளன எனப் பிரதேச செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் கிழக்கு, அச்சுவேலி தெற்கு, பத்தைமேனி, புத்தூர் வடக்கு, நீர்வேலி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தலா 10 வீடுகள் இந்தத் திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்படும் என்றும் -

வீடமைப்புக்கான பயனாளிகள் தெரிவு நடைபெற்று வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் -

இதற்கென மூன்று திட்ட முகாமையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் - கூறப்பட்டது. (எ-72)

## கோப்பாய்ப் பிரதேசத்திலும் மத்தியஸ்தர் சபை

கோப்பாய்,மார்ச் 18

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 31 கிராம அலுவலர் பிரிவிலும் மத்தியஸ்தர் சபைக்கென 50 பேர்கள் தெரிவுசெய்யப்பட்டு தெரிவிற்கான சிபார்சுக்கென மத்தியஸ்தர் சபைச் செயலாளருக்கு அவர்கள் தொடர்பான விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ-72)

# தென்மராட்சியில் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரம் இன்று ஆரம்பமாகிறது

தென்மராட்சி,மார்ச்18

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களின் பிரசாரக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பித்து வைப்பார்.

சாவகச்சேரி நகரசபைக்கான பிரசாரக் கூட்டம் சங்கத்தானை முருகமூர்த்தி கோயில் முன்றிலிலும் -

சாவகச்சேரி பிரதேச சபைக்கான பிரசாரக் கூட்டம் கொடிகாமம் பிரதேச சபை கேட்போர் கூடத்திலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# 'திரிசெவன' திட்டத்தின் கீழ் சிறுப்பிட்டியில் 20 வீடுகள்

கோப்பாய், மார்ச் 18

வீடமைப்பு அதிகார சபையின் 'திரிசெவன' வீடமைப்பு திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் சிறுப்பிட்டி கிழக்கு, பன்னாலை கிராம அலுவலர் பிரிவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கென இந்தப் பகுதியில் 20 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்று வீடுகள் அமைக்கப்படும் பணிகள் தற்போது நடைபெற்றுவருவதாக கோப்பாய் பிரதேச செயலக உயரதிகாரி தெரிவித்தார். (எ-72)

# குருநகர் இறங்குதுறையூடாக பாலைதீவுக்கு யாத்திரிகர்கள்

குருநகர்,மார்ச்18

பாலைதீவு யாத்திரைத் தலத்துக்குச் செல்வதற்கான அனுமதியைப் படையினர் வ்ழங்கியதைத் தொடர்ந்து குருநகர் இறங்குதுறையூடாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பாலைதீவை நோக்கிப் புறப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணி தொடக்கம் குருநகரிலிருந்து மக்கள் தமது பயண ஆயத்தங்களுடன் குருநகர் இறங்குதுறை நோக்கிச் சென்றனர். குருநகர் இறங்குதுறையிலுள்ள படையினர் அடையாள அட்டைகளைப் பரிசீலித்து குருநகர் இறங்குதுறைக் கடலுக்குச் செல்ல அனுமதித்தனர்.

அன்றையதினம் முற்பகல் 9 மணியளவில் முதலாவது படகு பயணிகளைச் சுமந்து பாலைதீவை நோக்கிச் சென்றதாகவும் -

அன்றையதினம் பிற்பகல் 4.30 மணிவரை சுமார் 90 படகுகளில் பயணிகள் சென்றனர் எனவும் - ஒவ்வொரு படகிலும் சுமார் 20 பேர்வரை பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர் என்றும் - குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்தது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறும். மறுதினம் திங்கட்கிழமை பக்தர்கள் கடலூடாக குருநகருக்குத் திரும்புவர்.(எ-30-51)

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம்

தென்மராட்சி,மார்ச்18

பிரசித்தி பெற்ற மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

மார்ச் 20, 27, ஏப்ரல் 3, 10 ஆகிய திகதிகளில் பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளது.

பொங்கல் உற்சவத்தையொட்டி வட பிராந்திய போக்குவரத்து சபை மற்றும் தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கம் என்பவற்றினால் விசேட பஸ்சேவைகள் நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-117-31)

## புத்தூர் கிந்துசிட்டியில் கள் அடைக்கும் தொழிற்சாலை

கோப்பாய்,மார்ச் 18

புத்தூர், கிந்துசிட்டியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் 40 லட்சம் ரூபா செலவில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

தற்போது கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்றும் - விரைவில் இயந்திர உபகரணங்கள் பொருத்தப்பட்டதும் தொழிற்சாலையின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-72)



ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் அண்மையில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான வே.இளையகுட்டி, மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். வித்தியால ! அதிபர் அ.அருந்தவநேசனும் மாணவர்களும் காணப்படுகின்றனர்.
(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

## சட்டவிரோத மது விற்பனையைத் தடுக்க விழிப்புக் குழு அமைப்பு

அச்சுவேலி,மார்ச் 18

சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்கும் வகையில் ஆவரங்கால் மேற்கில் விழிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆவரங்கால் மேற்கில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான விற்பனை குறித்து பொது மக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டதுடன், இதுதொடர்பாக பத்திரிகைகளிலும் காலத்துக்காலம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து சனசமூக நிலையங் கள், பொது அமைப்புகளின் பிரமுகர்கள் அண்மையில் ஒன்றுகூடி, 20 பேர்கொண்ட விழிப்புக் குழுவை நிறுவியுள்ளனர். ( - 1)

# திருமண நாள் வாழ்த்து



திரு.திருமதி
**தம்பிஜயா லீலாவதி**
35 ஆம் ஆண்டு திருமண நிறைவை இன்று 18.03.2006 இல் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடும் *தம்பிஜயா லீலாவதி* தம்பதியினரை அரியாலை சித்தி விநாயகர், நல்லூர்க்கந்தன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றேன்.

*485, கண்டி வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

பாசமுடன்
சர்மிலா
(மகள்)

**திரு.திருமதி தம்பிஜயா லீலாவதி**

(48108) (39-11-15)



# வரதன் லேனர்ஸ்



"அ" தர சாரதி பயிற்சி பாடசாலை



VARATHAN LEANERS

"A" GRADE DRIVING SCHOOL

யாழ்.நகரில் சிறந்தமுறையில் சேவையாற்றி பல நல்லொழுக்கமுள்ள நற் சாரதிகளை உருவாக்கிய எமது நிறுவனம்.

18 வயதைப் பூர்த்தியான (ஆண், பெண்) கல்லூரி மாணவர்களுக்கும், சிற்றூர்த்திச் சங்க ஓட்டுநர்களுக்கும் அரச, தனியார் ஊழியர்களுக்கும் மிக இலகுவான பயிற்சி முறைகளை வழங்கி ஒரு மாத காலத்தில் சாரதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சலுகைக்கட்டண அடிப்படையில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரும்பியவர்கள் முன் கூட்டியே பதிவு செய்யவும். சனி, ஞாயிறு, அரச விடுமுறை நாள்களில் விசேட வகுப்புகள் நடைபெறும்.

*தொடர்புகளுக்கு:*

*நவீனசந்தை மேல்மாடி,*
*சாவகச்சேரி.*
T.P.: 777- 110868

133, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021- 222- 8037
0773608785.

(48156)(39-11-15)


## தையல் பயிற்சிக்கு விண்ணப்பம்

நல்லூர்,மார்ச்.18

நாயன்மார் கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையம் படித்து வேலை வாய்ப்பின்றி இருக்கும் யுவதிகளுக்குத் தையல் பயிற்சி களை வழங்கவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் தமது விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பாரதி மன்ற சனசமூக நிலையம், நாயன் மார் கட்டு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட் கப்பட்டுள்ளது. (எ-111-202)

## தமிழரசுக் கட்சி வேட்பாளருக்கு கலந்துரையாடல்

சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேசசபை ஆகிய வற்றின் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற் றின் கட்சி வேட்பாளர்களைக்கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவி ராஜ் கேட்டுள்ளார். (எ-117)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:-
ROYAL INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப்பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

(C-43109)



# மரண அறிவித்தல்

## *திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி*



கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி 15.03.2006 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் வேலுப்பிள்ளையின் மனைவியும் சிவமலர் (மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, திருகோணமலை), சிவநேசன், கைலேஸ்வரன் (கணக்காளர், சுகாதாரத் திணைக்களம், வவுனியா), சறோஜா (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), கைலேஸ்வரி கருணாநிதி (சுவிஸ்), தயாநிதி (உள்ளூராட்சித் திணைக்களம், திருகோணமலை), குகனேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பும் தாயும் இராஜேஸ்வரி, சசிப்பிரபா (அதிபர், உதவி விவசாயப் பணிப்பாளர், விவசாயக் கல்லூரி, வவுனியா), நடேசபிள்ளை (சுவிஸ்), சிறீதேவி (சுவிஸ்), ரூபகாந்தன் (சுவிஸ்), பாரதிதாசன் (மாகாண பொது நிர்வாக அமைச்சு, திருகோணமலை) ஆகியோரின் மாமியும் சுறாஜ் (சுவிஸ்), சுமித்தா (யாழ்.செயலக கிராம அபிவிருத்தித் திணைக்களம்), நித்திலா, சுலக்ஷி, அபிரூபன், நர்மதன், ஜனனி, றதீப், அபிநயா, விதுர்ஷிகா, அபிஸ்நிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் கருவேலடி லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*கருவேலடி லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

*தகவல்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48178) (39-11-15)



# 2005 இல் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளின் சாதனை வரிசையில்...

*1) தேசிய கல்வியியற் கல்லூரி அழகெழல் -2005*
*மாவட்ட மட்டம்:*

| | |
|---|---|
| i. *கிராமிய நடனம் (உழவர் நடனம்)* | *முதலாமிடம்* |
| ii. *சிறுவர் நாடகம்: ( ஒற்றுமையே பலம்)* | *முதலாமிடம்* |
| iii. *இசையும் அசைவும் குழு* | *2 ஆம் இடம்* |

*2)உலக சுற்றாடல்தினம் -2005*
*நாடளாவிய சுற்றாடல் நாடகப் போட்டி*
*திறந்த போட்டி'' வனத்திற்கு வாழ்வளிப்போம்''*
*மாவட்டம்: முதலாம் இடம்*
*தேசியமட்டம்: இரண்டாம் இடம்*



கௌரவ ஏ.எச்.எம். பௌசி அவர்கள் தலைமையில் (சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு) மருதானை டவர் மண்டபத்தில் 27.07.2005 இல் நடைபெற்றது.

*3)சிறுவர் அரங்கு (ஒற்றுமையே பலம்)*
*கோட்டம், வலயம்,* } *முதலாமிடம்*

*மாவட்டமட்ட சிறுவர் அரங்கு* — *நிகழ்வு 2005.12.10 இல் யா/ வேலணை சேர்வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.*

*4)தமிழ் மொழித்திறன் -2005*

| | நிகழ்ச்சி | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|---|
| 1. செல்வி ஸ்ரீதரா வரதராஜா | நடனம் தனி | 1 | 1 | 1 | 1 | 2 |
| 2. செல்வி டுவாரகா ஞானசேகரம் | ஆக்கத்திறன் வெளிப்பாடு | 1 | 1 | 2 | - | - |
| 3. செல்வி அர்ச்சனா சிவராசா | வாசிப்பு | 1 | 1 | 2 . | - | - |
| 4. செல்வி தனுஜா அமிர்தலிங்கம் | இசையும் அசைவும் | 2 | 2 | - | - | - |
| 5. செல்வி சாரங்கா சபாநாயகம் | பேச்சு | 2 | 2 | - | - | - |
| 6. செல்வி திவ்யா ஜெயானந்தராஜா | ஆக்க எழுத்து | | 3 | - | - | - |

*செல்வி ஸ்ரீதரா வரதராஜா*



2005 நவம்பர் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ் மொழித்திறன் பிரிவு 1 தனிநடனம் போட்டியில் பங்கு பற்றி 2ஆம் இடம் பெற்றுள்ளார்.

## English Day Competitions -2005

| | | |
|---|---|---|
| 1.Recitation | Grade 3- | Jeyabairavi Jeyasothy recitation divisional level 3rd place |
| | Grade 4- | Supaluxmiy Selvarajan recitation divisional level 1st place, Zonal level 3rd place |
| | Grade 5- | Piraveena Sivanesan recitation divisional level 3rd place |
| 2.Hand writing | Grade 3- | Jeyabairavi Jayasothy divisional level 3rd place |

| | | | |
|---|---|---|---|
| PrimaryDrama - (God's Grace) | Divisional | level | First |
| | Zonal | level | First |
| | District | level | Second |

மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு எமது உள்ளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.
மேலும் தொடர்ந்து பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறோம். என்றும் இறைவன் அருள் பாலிப்பாராக!
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.**

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவகத் தின் சிங்கள மொழி மூலம் நடத்தப்படும் விளையாட்டுத்துறை தொடர்பான டிப்ளோமா பாடநெறியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 18 - 35 வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன் க. பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் அல்லது எண் கணிதம் ஆகிய இருபாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுத்துறை அல்லது அரச உடற்கல்விப் பாடசாலையொன்றில் குறைந்த பட்சம் ஆறுமாதகாலப் பாடநெறியை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அல்லது இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சில் அல்லது மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ள விளையாட்டு அதிகாரியாக ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவகம், இல. 100/10, டொரிங்டன் மாவத்தை, கொழும்பு - 07' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கென போட்டிப் பரீட்சைக்குத் தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்க ள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் சட்டத்துறையில் பட்டம் பெற்று இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாதல் வேண்டும்.

அத்துடன் அங்கிலமொழி தொடர்பாக சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் 'ரஞ்சித் மலிகஸ்பே, செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கை பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு 11 தரம் இற்கு பொறியியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 45 வயதிற்கு மேற்படாதவராக இருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பௌதிகவியல், தூயகணிதம் உட்பட நான்கு பாடங்களில் ஓரே அமர்வில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் 'நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், இல. 230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

நெடுஞ்சாலைகள் அமைச்சில் தொலைபேசி இயக்குநர்/வரவேற்பாளர் பதவிக்கான விண்ணப்பங்களை தகுதியானவர்களிடமிருந்து கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 45 வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம், தமிழ்மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம் உட்பட நான்கு திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம்திகதிக்கு முன்னர் 'செயலாளர், நெடுஞ்சாலைகள் அமைச்சு, 9 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்திரமுல்லை' எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் தொகுதி 'ஆ' தரம் 1 'ஆ' பிரிவு அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆள் களை சேர்த்துக் கொள்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம் அத்துடன் எண்கணிதம்/தூயகணிதம்/ அடிப்படைக் கணிதம்/ வணிக எண்கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருக்கவேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் ஏப்ரல் 12 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர், ஒழுங்குபடுத்தும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல, 1503, கொழும்பு' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)



வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில், வில்லிசைக் கலைஞரும் சமூக சேவையாளருமான அப்புத்துரை அழகேந்திரனுக்கு சிவதர்மவள்ளல் சச்சிதானந்தன் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

படம்:
(வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)



காரைநகர் சைவத்திரு கே.கே.சுப்பிரமணியத்தின் அறப்பணிகளைப் பாராட்டி அண்மையில் திருவாவடுதுறை திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதின குரு முதல்வர் அருள்திரு நமசிவாய மூர்த்திகள் குருபூசையில் வைத்து பொன்னாடை போர்த்து 'சிவத்திருத் தொண்டன்' என்னும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

நிகழ்வில் அவருக்கு இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் பொன்னாடை போர்த்து விருது வழங்கிக் கௌரவித்து ஆசி வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-204)

# நூல் வரிசை



நூல் : தொடர்பாடலுக்கான தகவல் தொழில்நுட்பம்
ஆசிரியர் : இராசதுரை சுகுமார்
வெளியீடு : கணனிப்பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி

நவீன உலகில் யாவும் தகவல் தொழில்நுட்ப மயமாகிவிட்டது. எதற்கெடுத்தாலும் தொழில்நுட்பம். எம்மால் முடியாது என புறந்தள்ளிய விடயங்களை எம் கண்முன்னே நடத்தி வைப்பது தினமும் நிதர்சனமாகிவருகிறது. இந்நூலின் ஆசிரியர் இ.சுகுமார் பல வருடங்களாக கணனித்துறையில் அனுபவம் பெற்றவர். இவர் மாணவர்களுக்கு தாய்மொழியில் பாடநூல் வெளிவராத நிலையில் தான்பெற்ற கணனி அறிவைக்கொண்டு மாணவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் அவர்களின் பாடப்பரப்புக்கு அமைவாக அவரின் சிந்தனையில் உதித்த தொடர் பாடலுக்கான தகவல் தொழில்நுட்பம் நூல் வெளிவந்துள்ளது.

மாணவர்கள் ஆர்வத்துடன் கணனியில் கற்பது போன்ற அழகிய வர்ணப் புகைப் படத்தை தாங்கி வெளிவந்துள்ளது

இந்நூலில் ஆசிரியர், க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்குரிய பிரதான ஏழு அலகுகளில் இரண்டு அலகுகளினையும் அதற்கான மாதிரி வினாக்களையும் நூலில் பிரதானமாகக் குறிப்பிட்டுள்ளார். இவர், அவர்களின் பாடப்பரப்புக்கமைவாக வன்பொருள் பாகங்களும் அவற்றுக்குரிய விளக்கங்களும் கணனிதோன்றிய வரலாறு, கனணி வலையமைப்பு அதன் நன்மை தீமைகளையும் இவ்வாறு இன்னும் பல விடயங்களையும் முதலாவது அலகில் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது அலகில் நாம் கொடுக்கின்ற தரவுகளினை இலக்கப் பகுப்பாய்வு முறையிலேயே கணனியானது விளங்கிக்கொள்கின்றது. இலக்கப் பகுப்பாய்வின் வகைகளையும் அதன் முறைகளையும் இலகுவான உதாரணங்களுடன் விளக்கியுள்ளார். மேலும் Boolean Algebra என்பவரின் AND, OR, NOT செயற்பாடுகளையும் உண்மை அட்டவணையும் அதற்கான வரைபடங்களையும் (Gates) குறிப்பிட்டுள்ளதுடன் இதற்கான மாதிரி வினாக்களையும் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

இந்நூலானது க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு மட்டுமன்றி க.பொ.த உயர்தர மாணவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் ஏனைய அடிப்படை அறிவை பெறவிரும்பும் அனைவருக்கும் பயனுள்ள வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

இவர் இவ்விரு அலகுகளுடன் மட்டும் நின்றுவிடாமல் ஏனைய அலகுகளையும் தொடர்ந்து வெளியீடு செய்து மாணவர்களை தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு சிறந்த, முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையினை ஏற்படுத்தவேண்டும்.

வ.சிவகுமார்.



நூல் : கடலலைகள் கொஞ்சும் நகர்
ஆசிரியர் : கலையார்வன் (கு. இராயப்பு)
வெளியீடு : நெயோ கல்சரல் கவுன்சில்

மனித வாழ்வியலும் வரலாறும் பின்னிப்பிணைந்துள்ளன. வாழ்வியல் தொடரில் புதைந்து போனவையும் மறந்து போனவையும் பல. இவற்றைத் தோண்டி எடுத்து மீண்டும் மக்கள் மனதில் நிலை நிறுத்தும் வகையில் பதிவுகளாக இது வெளிவந்துள்ளது. 'கலையார்வனின் கடலலைகள் கொஞ்சும் நகர் நூல்.'

முன் அட்டைப் படம் கடலோர மக்களின் வாழ்வியல் தேடலை சித்திரிக்கும் வகையில் நீர், நிலம், ஆகாயம் என்பற்றைத் தாங்கி அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

நூலாசியர் தான் பிறந்த, நேசிக்கும் மண், தொழில் என்பவற்றை மரபு வழுவாது மொழி நடையில் தந்துள்ளார்.

குருநகர் என்ற நகரின் சமூகத்தின் தனித்துவங்கள், சிறப்புகள் என்பன பல்வேறு தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன.

சடங்குகள், புனித யாத்திரைகள் தொழில் வளர்ச்சி, கடற்கலப் பயன்பாடு, தொழில் உபகரணம், தொழில் பண்புகள், வலைகளின் அமைப்புகள், தொழில் முறைகள், தொழிலாற்றுகையில் எதிர்கொள்ளும் அபாயங்கள், குருநகர் கொண்ட ஆலயம், விளையாட்டு, கலை, சிற்பம், ஓவியம் என்பன மண்வாசனையைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

இறுதியாகச் சேர்க்கப்பட்டுள்ள 'மண்ணின் நினைவுகள் கடந்த கால நினைவுகளை இன்னும் நினைவு படுத்துகின்றன.'

இந்த நூல் அறிவுத் தேடல் உள்ளவர்களின் அறிவுப் பசிக்கு நல்லுணவாகவும், ஆய்வுகள் மேற்கொள்பவர்களுக்கு நல்ல உசாத்துணை நூலாகவும் விளங்குகிறது.

சமூகச் சிந்தனையுடனும் தூரப் பார்வையுடனும் இந்த நூலை வெளியிட்டுள்ள ஆசிரியர் தொலைந்து போன - போகின்ற-போகப்போகின்ற கிராமங்களின் வரலாறுகளையும் எதிர்கால, நிகழ்கால சந்ததியினருக்கு தருவார் என எதிர்பார்க்கின்றோம்.

தயா.



நூல் : பாக்யா இதழ் -01
ஆசிரியர் : எஸ். இராஜகுலேந்திரன்
வெளியீடு : பாக்யா காகிதாதிகள்.

சிறுவர்களுக்கென முற்றுமுழுதாக அச்சிடப்பட்ட ஒரு இதழாக பாக்யாவின் முதல் இதழ் வெளியாகியுள்ளது.

சிறுவர்களை வாசிக்கத்தூண்டும் வகையில் படங்களையும், சிறுசிறு துணுக்குகளையும் உள்ளடக்கியுள்ள இந்த இதழ், சிறுசிறு கதைகளையும் கொண்டுள்ளது.

அத்துடன் இறைவனது ஒவ்வொரு மூர்த்தங்களும் படங்களாகப் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

முழுக்கமுழுக்க இது சிறுவர்களுக்கேயுரிய இதழாக வெளியாகியுள்ளமை சிறப்பான அம்சமாகும்.

கங்கா





நூல் : நூல் பன்னிரு திருமுறைத் திரட்டு
ஆசிரியர் : பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்
வெளியீடு : அகில இலங்கை திருமுறை மன்றம்

கந்தர்மடம் அகில இலங்கை திருமுறை மன்றத்தினரால் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட பன்னிரு திருமுறைத் திரட்டு மற்றும் பன்னிரு திருமுறைப் பாமாலை ஆகிய இருநூல்களும் வரப்பெற்றோம்.

திருமுறைகளைப் பயில விரும்புவோர்க்கும் அவைகளைத் தமது தேவைக்காகச் சேமிக்க விரும்புவோருக்கும் இந்த நூல்கள் பயன்படும்.

# அதிபர்கள் இடமாற்றம்

வலிகிழக்கு,மார்ச்18

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் புதிய அதிபராக நல்லூர் ஞானோதயா வித்தியாலயத்தில் கடமையாற்றிவந்த சு.இராசலிங்கம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் கடமையாற்றி வருகின்றார்.

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபாராகக் கடமையாற்றி வந்த எஸ்.சண்முககுமார் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். (180-204)

## இணைப்புக் குழுக் கூட்டம்

வடமராட்சி,மார்ச் 18

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடப்படும். (3-173)

## நாவற்காடு பொது மண்டப நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும் நிலையில்

தென்மராட்சி,மார்ச்18

வரணி நாவற்காடு பிரிவில் அமைக்கப்பட்டுவரும் பொதுநோக்கு மண்டப வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

'மகிந்த சிந்தனை' திட்டத்தில் தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சு இந்தக் கட்டட வேலைக்கு பத்து லட்சம் ரூபா வழங்கியுள்ளது.

இப்பகுதி மக்களின் பங்களிப்புடன் இந்தக் கட்டட வேலைகள் 11லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டதாக கிராம அலுவலர் இ.நாகதேவன் தெரிவித்தார்.

மண்டபம் அடுத்தமாத நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படும் - என்றும் தெரிவித்தார். (எ-117)


**ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்**

வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள

**வி.நாகராஜ சுவாமிகள் N.முனியம்மா** அவர்கள்

இவர்கள் ஜாதகம், கைரேகை மூலமாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம். குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றனர். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

➢ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம். (47885) (26.17.15)

**பிள்ளையார் இன்**

அறை எண் 5, 31,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 077 9582596.


## 25ஆவது திருமண ஆண்டு விழா



ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

**பாலசுப்பிரமணியம் உதயகுமார்**
**உதயகுமார் குமுதினி**

இல்லறம் எனும் நல்லற வாழ்வில் இணைந்து இன்று (18-03-2006)சனிக்கிழமை வெள்ளிவிழா காணும் தம்பதிகளை மேலும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறோம்.

(சி/48400)(26.19) **பிள்ளைகள்.**


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

கம்யூட்டர் எக்ஸ்பிரசின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி கணக்கியல் துறையில் ஆர்வமுள்ளோரிற்கான ஒருவாரகால முழுநேர கணனிக் கணக்கியல் கற்கைநெறி.

**Diploma in Computerized Accounting**

**Accpac+Quick Books Pro+Tally**

ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

*One week Course*

யாருக்கு:-
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,N.G.O) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும்,பல்கலைக்கழக மாணவர்கள்,உயர்தொழினுட்பக் கல்லூரி மாணவர்கள், ஏனைய கணக்கியல்துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவருக்கும்

Course Fee:- ~~1500~~ 3500


நன்மைகள்:-
- வெளிநாட்டு,உள்நாட்டு வேலைவாய்ப்புக்களை இலகுவாகப் பெறலாம்.
- 100% தொழில்சார்ந்த பயிற்சிநெறி
- தகைமை, அனுபவம் வாய்ந்த போதனாசிரியர்கள்.
- Free Study Pack
- 100% செய்முறைப் பயிற்சிகளிற்கான உத்தரவாதம்
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் :-
**20/03/2006**

*Diploma in Computerized Accounting*
3 மாதகால கற்கைநெறி ஆரம்பமாகிறது.
*18/03/2005 :- 08.30am*
*19/03/2005 :- 02.00pm*


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 02 . 1925
மறைவு 10 . 02 . 1997

அமரர்
**வல்லிபுரம் சிங்கராசா**

**திதி: 18.03.2006**

அன்போடு எம்மை அரவணைத்து எமது
உயர்வுக்காக உழைத்த உத்தமரே
நீங்கள் சென்று மறைந்தீர்கள் ஒன்பதாண்டு
எங்கள் உள்ளத்தில் வீற்றிருப்பீர்கள் பல்லாண்டு
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும் ...!

197, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(45126)(51-26-19)


முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Computer Hardware Engineering Course**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

**உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி**

◊Assembling ◊Upgrading ◊Troubleshooting ◊Fault Finding ◊Repairing ◊Servicing ◊Software Installation ◊Configuring ◊Introduction to Networking

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
*20/03/2006* :- 08.30-4.00

*Hard ware பயிற்சி*
- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Troubule Shooting / Maintenance.

*Software பயிற்சி*
- Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- Software Install செய்யும் முறை
- Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்
- பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
*No 15, Sirampiyadi lane , Jaffna.*
Telephone :- 021-2228250 , 0777-222422

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **ஜெயகாந்தன் ஜெயக்குமாரி**

மலர்வு:02.01.1976 உதிர்வு:29.03.2005

*திதி: (18-03-2006)*
*சங்கடஹர சதுர்த்தி*

ஆண்டு ஒன்று சென்றும்
ஆறவில்லை உன் துயரம்,
பாதி வாழ்வில் எனைப் பரிதவிக்கவிட்டு
பறந்து சென்றதேனோ?

உன் பிரிவால் துயருறும்:
கணவர்,
(செ.ஜெயகாந்தன்).

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(46098)(51-26-19)

# வடக்கு பக்தாத்தில் அமெரிக்கப்படைகள் பெருமெடுப்பில் வான் வழித்தாக்குதல் !

பக்தாத், மார்ச்18

ஈராக்கில் பக்தாத்தின் வடபகுதியில் தீவிரவாதிகளின் நிலைகள் மீது அமெரிக்கா பெரும் எடுப்பிலான வான்வழித் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தத் தாக்குதலுக்கு 'ஒப்பரேஷன் சுவார்மெர்' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

ஈராக்கில் சதாம் ஹுசேன் ஆட்சி வீழ்ச்சியடைந்து விட்டாலும் அங்கு தீவிரவாதிகளின் வன்முறை தொடர்கிறது. கார்க் குண்டுவெடிப்புகள் அங்கு வழக்கமான ஒன்றாகிவிட்டன.

இதுபோன்ற தாக்குதல்களுக்கு ஏராளமான அப்பாவி மக்களும், அமெரிக்கப் படையினரும் பலியாகி உள்ளனர். இந்த நிலையில், சதாம் ஆதரவுத் தீவிரவாதிகள் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகளின் கொட்டத்தை ஒடுக்கும் வகையில் அமெரிக்கப் படையினரும், ஈராக் படையினரும் பெரிய அளவிலான தாக்குதலை ஆரம்பித்தனர். பக்தாத்தின் வடபகுதியில் உள்ள சில இடங்களைக் குறிவைத்து வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட போர் விமானங்களும், ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர்.




கடந்த 2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அதன்பின்னர் பெரிய அளவில் நடத்தப்படும் தாக்குதல் இது என்று கூறப்படுகிறது. ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு வடக்கே 125 கி.மீ. தொலைவில் உள்ள சமாரா நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தப் பகுதி மலைப்பகுதி என்பதால் இங்கு அல்கெய்டா தீவிரவாதிகள் முகாமிட்டு ஈராக்கில் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாக நம்பப்படுவதால் அவர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக ஹம்ரீன் என்ற பகுதியில் கடுமையான தாக்குதல் நடப்பதாகக் கூறப்படுகிறது.

'ஒப்பரேஷன் சுவார்மெர்' என்ற பெயரில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் தீவிரவாதிகளை முற்றிலும் ஒழித்துக் கட்டும் வரை பல நாள்களுக்குத் தொடரும் என அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதாம் ஹுசேன் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் நேற்றுமுன்தினம்தான் அந்நாட்டில் பொதுத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாடாளுமன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இருப்பினும், புதிய அரசு அமைப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக சபை கூடிய சில நிமிடங்களிலேயே அதை சபாநாயகர் ஒத்திவைத்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தாக்குதல் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் கிடைத்த தகவல்களின்படி அமெரிக்க மற்றும் ஈராக் இராணுவத்தினரின் தாக்குதலில் ஏராளமான தீவிரவாதிகளின் வெடிமருந்துகள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இன்னும் குமுறிக் கொண்டிருக்கிறது அந்தமான் பேரன் தீவு எரிமலை!

போர்ட்பிளேர், மார்ச் 18

கடந்த ஒன்பது மாதங்களாக குமுறிக் கொண்டிருக்கும் அந்தமான் பேரன் தீவில் (ஆளில்லாத தீவில்) உள்ள எரிமலை முகப்புப் பகுதியில் தற்போது ஐம்பது மீற்றர் உயரத்திற்கு நெருப்புக்குழம்பு தெரிகிறது என்று நிலவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்திய நிலவியல் ஆய்வுப் பிரிவின் துணைப் பொது இயக்குநர் பி.கே.சஹா தலைமையில் 12நிலவியல் அறிஞர்கள் அடங்கிய குழு கடந்த சனிக்கிழமை அன்று அந்தமானிலுள்ள பேரன் தீவுக்குச்சென்றது. எப்போதும் இங்கே கப்பல்படைவீரர்கள் சென்று பார்வையிடுவது வழக்கம். இந்திய கடற்படை உதவியுடன் 'சமுத்ரமந்தன்' என்ற கப்பல் மூலம் சென்ற அக்குழு அங்கு குமுறிக் கொண்டிருக்கும் எரிமலையை ஆய்வுசெய்தது. கடந்த மே மாதத்திலிருந்து எரிமலை குமுறிக் கொண்டிருப்பதால், அதன் உச்சிப்பகுதியில் ஐம்பது மீற்றர் உயரத்திற்கு எரிமலைக் குழம்பு வெளிவருவதைக் கண்டனர். பொதுவாக பயங்கர எரிமலைக் குழம்பு கிலோமீற்றர் கணக்கில் அனல் காக்கும் குழம்புடன் வெளிவருவது உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

# யுரேனியம் தோண்டும் பணியை தீவிரப்படுத்துகிறது இந்தியா!

ஹைதராபாத், மார்ச்18

யுரேனியம் தோண்டியெடுக்கும் பணியைத் தீவிரப்படுத்தியுள்ளது இந்தியா. ஆந்திர மாநிலம் நல்கொண்டா மாவட்டத்தில் சிட்ரியால் பகுதிக்கு யுரேனியம் தோண்டியெடுக்கும் பணிக்காக இயந்திரங்கள் விரைவில் வரவுள்ளன.

இதற்காக 2.5 கோடி இந்திய ரூபா மதிப்பிலான கேள்வியைக்கோரியுள்ளது. அணு சக்தித்துறையின் அணுவிசை கனிமத்துறை யுரேனியம் தோண்டியெடுக்கும் பகுதி ஹைதராபாத்தின் தென்மேற்கில் 130 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது இந்தியாவின் புலிகள் சரணாலயங்களில் ஒன்றான ராஜீவ்காந்தி வனவிலங்கு சரணாலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது. சிட்ரியால் பகுதியைச் சுற்றிலும் 50 சதுர கிலோமீற்றரில் யுரேனிய கதிர்வீச்சு காணப்படுகிறது. எனவே, யுரேனியம் அபரிமிதமாக உள்ள இப்பகுதி கண்டறியப்பட்டுள்ளது.

யுரேனியம் இறக்குமதிசெய்ய அமெரிக்காவுடன் சமீபத்தில் செய்து கொண்ட ஒப்பந்தம் வழி செய்கிறது. எனினும், வெளிநாட்டு விநியோகம் பாதித்தால் அதை ஈடுகட்டும் பொருட்டு யுரேனியம் தோண்டியெடுக்க மத்திய அணுசக்தித்துறை திட்டமிட்டுள்ளது. (ஐ)

# அகதிகளை ஏற்றிவந்த இலங்கைப்படகு இராமேஸ்வரத்தில் கைப்பற்றப்பட்டது!

## இலங்கை திரும்பமுயன்ற இரு பெண்களும் அங்கு கைது

சென்னை, மார்ச் 18

தமிழகத்துக்கு ஈழ அகதிகளை ஏற்றி வந்த படகு ஒன்றை இராமேஸ்வரத்தில் இந்தியக் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கைதுசெய்திருக்கின்றனர். இதேவேளை இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு திரும்ப முயற்சித்தார்கள் எனக் கூறப்படும் இரண்டு பெண்களையும் அதிகாரிகள் கைது செய்திருக்கின்றனர்.

கடந்த மார்ச் 10 இல் இலங்கையிலிருந்து அகதியாகவந்த வவுனியாவைச் சேர்ந்த திலகவதி (50) இவரது மருமகளான கரூர் அகதி முகாமில் தங்கியிருந்த இலங்கைப் பெண் விஜயலட்சுமி (22) ஆகிய இருவரும் இலங்கைக்குச் செல்வதற்காக இராமேஸ்வரம் வந்ததாகவும் தெரிவித்தனர். இவர்கள் கொடுத்த தகவலின்படி நேற்றுமுன்தினம் இரவில் குடிவரவு கண்காணிப்பாளர் தங்கச்சிமடம் வடக்கு கடற்கரை பகுதியில் ரோந்து சென்றனர். இரவு 10 மணிக்கு இலங்கை படகு ஒன்று கடற்கரையை நோக்கிவந்தது. படகில் இருந்து அகதிகள் இறங்குவதைப் பார்த்த அதிகாரிகள் படகைநோக்கிச் சென்றனர். அப்போது படகில் இருந்த படகோட்டிகள் இருவரும் கடலில் குதித்து காட்டிற்குள் தப்பியோடிவிட்டனர். படகில் வந்த இலங்கை வவுனியாவைச் சேர்ந்த அகதிகள் பசுவதி (54), சிங்ரன் (16), சசி(30), விநாயகி(40), நிலோஸ்(23), சுபாகர்(10) ஆகியோரைக் கைதுசெய்த அதிகாரிகள் விசாரணைக்குப் பின் தங்கச்சிமடம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். அகதிகளை ஏற்றிவந்த இலங்கைப் படகையும், இயந்திரத்தையும் பறிமுதல் செய்த அதிகாரிகள் தப்பியோடிய இலங்கைப் படகோட்டிகளைத் தேடி வருகின்றனர். பிடிபட்ட 6 அகதிகளும் பொலீஸாரின் விசாரணைக்குப் பின் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கள்ளத்தனமாக இலங்கை செல்ல முயன்ற இரண்டு பெண்களையும் இராமேஸ்வரம் பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். (ஐ)

உலக அரங்கில்

## ஆப்கானிலும் பறவைக்காய்ச்சல்

லண்டன், மார்ச்18

ஆப்கானிஸ்தானிலும் பறவைக்காய்ச்சல் தொற்றுஏற்பட்டுள்ளது.

காபுல் நகரிலும் ஜலலாபத்திலும் பறவைகளில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் பறவைக்காய்ச்சலுக்கான 'எச் 5 ஏன் 1' வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆப்கானில் இதுவே முதல் தடவையாக இவ்வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் 31 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் பறவைக்காய்ச்சல் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானிலிருந்து இறைச்சிக்கோழி தருவிப்பது உடனடியாகத் தடைசெய்யப்பட்டுவிட்டது.(ப)

## பாகிஸ்தானில் மின்நிலையம் தகர்ப்பு

குவெட்டா, மார்ச்18

பாகிஸ்தானின் தென்மேற்கு பாகிஸ்தான் மாகாணத்தில், இரு பெரிய மின்விநியோக நிலையங்கள், சக்தி வாய்ந்த நாட்டு வெடிகுண்டுகள் மூலம் தகர்க்கப்பட்டன. அதையடுத்து, அப் பகுதியில் 3 மாவட்டங்களில் மின்விநியோகம் பாதிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கின. ஏராளமான தொழிற்சாலைகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. ஏராளமான விவசாய நிலங்களும் நீரின்றிக் காய்ந்தன. தற்காலிகமாக மின்விநியோகம் செய்யமாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த பழங்குடி அமைப்பினர்தான் இத்தாக்குதலை நடத்தி இருக்கக்கூடும் என்று அரச அதிகாரி ஒருவர் கூறினார். (ஐ)

# இந்தியாவில் நீர்யானைக்கு பல் சத்திரசிகிச்சை வெற்றி

சென்னை, மார்ச் 18

சென்னையில் சாகஸ நிகழ்ச்சிகளில் பார்வையாளர்களை மகிழ்வித்துவந்த நீர்யானையின் வாயில் தேவையின்றி வளர்ந்த நீளமான கோரைப்பல்லை அறுவைச் சிகிச்சை மூலம் குறைத்தது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மருத்துவர் குழு.

ஆவடியில் உள்ள 'ஜம்போ ரஷ்யன் சாகஸ நிகழ்ச்சியில் ராஜா என்ற பெயரில் 30 வயதான நீர்யானை கடந்த ஆறு மாதமாக உணவு உண்ண இயலாமல் தவித்தது. அதன் எடை 2500 கிலோ (சுமார் இரண்டரை தொன்). உணவு சாப்பிட இயலாததால் கஞ்சி, பால் ஆகியவை மட்டுமே அதற்கு ஊட்டப்பட்டது.

அதையடுத்து அந்த நீர்யானைக்கு மயக்க மருந்து செலுத்தி, கம்பியின் மூலம் அதன் பற்களின் மூன்றில் ஒரு பங்கு வெட்டி எடுக்கப்பட்டது. கோரைப் பற்களின் மொத்த நீளம் ஒன்றரை அடி இருந்தது.

நீர்யானை எப்போதும் நீரில்தான் இருக்க வேண்டும். பத்து நிமிஷத்துக்கு மேல் வெளியே இருக்கமுடியாது. எனவே அறுவைச் சிகிச்சை செய்யும்போது அதன் மீது இடைவிடாமல் நீர்தெளிக்கப்பட்டது. இந்த சிகிச்சைக்கு அரை மணி நேரம் ஆனது. சிகிச்சை முடிந்த பிறகு அந்த நீர்யானை வழக்கம் போல் உணவு உண்ணத் தொடங்கியது. (ஐ)



சாகஸ நீர் யானையின் வாயில் நீளமாக வளர்ந்து விட்ட கோரைப் பற்களை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றுகின்றனர் கால்நடை மருத்துவர்கள். (உள்படம்) ஆபரேஷன் செய்யப்பட்ட பிறகு கோரைப் பற்கள்.

# சின்னஞ் சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Sharp எப்சன் இரு புறொஜெக்ரர் மற்றும் MD 90 மோட்டார் சைக்கிள் (மொடல் நம்பர் 22) TVS GLX 125 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777111 400 - சிறி. (48196)

## வீடு விற்பனைக்கு

8 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: S.சிறி, பிறவுண் வீதி, கொக்குவில். T.P.: 0777111400. (48195)

பருத்தித்துறை சாரையடி நீறுவிலி ஒழுங்கை பலோலிதெற்கு, புலோலி என்னும் முகவரியில் 2 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். T.P- 0777 075248. (48141)

## வீடு வளவு விற்பனைக்கு

பெரியவிளான் யுவானியார் கோயிலடியில் தெல்லிப்பழை வீதியில் 2½ பரப்புக் காணியும் கல்வீடும் கீதபொன்கலன் திரேசம்மாவுடையது. தொடர்பு: பிலோமினா T.P.: 0779604197. (48184)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

2 மாதங்கள் நிரம்பிய உயர்ரக அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- No. 55, ஆடியபாதம் வீதி கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (48192)

## வீடு வாடகைக்குத் தேவை

அரச ஊழியர் ஒருவரது சிறிய குடும்பத்திற்கு யாழ்.நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புக்கு : 0777550631. (48160)

கொக்குவில் கிழக்கு 29/16 உடையார் லேனில் உள்ள 4 அறைகள், சமையல் அறை, 2 விறாந்தை மற்றும் தண்ணீர், பிற வசதிகள் உள்ள வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக பெண் மாணவிகளுக்கு உகந்தது. தொடர்பு:- ம.செல்வராணி 29/16, உடையார் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (48183)

கார், வான், மோட்டார்சைக்கிள் என்பன Self Drive வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப்பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு 360, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) தொ.பே.: 021 222 9154, 0777 593722 (46335)

வேம்படி சந்தி, முதலாம் குறுக்குத் தெரு இல. 175 இல்அமைந்த மேல்மாடி வீடு 9 அறைகளுடன் 2கோல் (A/C) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்குகந்தது. தொடர்பு : க.கோபால், தொ.பே. 077636 6020, 021 4591885. (48152)

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட பஸ் நிலையம், சந்தை என்பவற்றுக்கு அண்மையாக இரு வீடுகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- 077 3164307. (48201)

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து 50m முன்பாக உள்ள ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இயங்கும் கட்டடத்தொகுதியில் உள்ள இல.1 கடை (32 அடி நீளம் 11அடி அகலம்) முற்பணத்துடன் / முற்பணம் இல்லாமல் வாடகைக்கு உண்டு. தொடர்பு:-T.P. 077 3039422. (48131)

## தவறிவிட்டது

சம்பியன்லேன் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சபாரத்தினம்தர்மதன் என்பவருடைய தேசிய அ.அட்டை (83144 2077 V), வாகன அனுமதிப்பத்திரம் என்பன 15.03.2006 புதன்கிழமை திருநெல்வேலிக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு : சு.ரத்தினவேல், பழம்றோட், கோப்பாய். தொ.பே. 07796 87905. (48166)

## மணமகள் தேவை

கனடா குடியுரிமையுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1973, 5' 3'' உயரம், பூரட்டாதி Computer Cum ( Net Work Engineer) மணமகனுக்கு டாக்டர், எஞ்சினியர் எக்கவுண்டன் or விஞ்ஞானப் பட்டதாரி பண்புள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்பு : 021 222 2168, 077 6341541. (47988)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1976, அனுசம், விருச்சிகராசி கிரகபாவம் 04, உயரம் 5' 8'' G.C.E. O/L படித்த வீடியோ மற்றும் புகைப்படக் கலைஞர் சொந்தமாக ஸ்ரூடியோ வைத்திருக்கும் மணமகனுக்கும். 1972, விசாகம், துலாம் ராசி 8இல் செவ்வாய் 21½ கிரகபாவம் A/L படித்த அரிசி ஆலை உரிமையாளர் மணமகனுக்கும் O/L , A/L வரை படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு:- சிவாலயா சர்வதேச திருமண நிலையம். இல.11, யமுனா வீதி, நல்லூர். தொ.பே: 077 6528641. (48191)

சுன்னாகம் வரியப்புலம் பட்டதாரி, 1975, உதயச்செவ்வாய், கிரகபாவம் 80 உடைய ஆசிரியருக்கு அழகான தொழில் உள்ள மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு:- 077 6140273. (48143)

காலில் ஊனமுள்ள 1954, அரச உத்தியோகத்தில் இருப்பவரிற்கு, ஊனமுள்ள அல்லது சுனாமியால் பாதிப்புற்றவரும் விண்ணப்பிக்கலாம். 1970, தனியார் ஸ்தாபன உத்தியோகத்தரிற்கு செவ்வாயுள்ள கிரகபாவம் 67. இந்து கௌரவ குடும்பத்து தொழிலுள்ள மணப்பெண் தேவை. தொடர்பிற்கு: 0776146273. (48142)

## மணமக்கள் தேவை

1982இல் பிறந்த றோ.க. மதத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு வெளிநாட்டில் குடியுரிமை பெற்ற மணமகனும், யாழ். இந்து 1973, 12 இல் செவ்வாய், அத்த நட்சத்திரம். 1979, திருவாதிரை நட்சத்திர பெண்களிற்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்மாரும், 1975, ரேவதி நட்சத்திரம், 26¾ கிரகபாவமுடைய நீர்பாசனத் திணைக்களத்தில் தொழில் புரிபவருக்கு பட்டதாரி மணமகளும் தேவை. தொடர்பு:- விதூஸ், இல.44, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P.: 077 6146221. (48187)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 20.03.2006 திங்கட்கிழமை பிற்கபல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம்-வட்டுக்கோட்டை, கரன்-ஆலடி உடு வில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48229)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima உயிர் (Broiler) மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு:- (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (48148)

## கெட்டிக்காரர்கள்

பேராதனைப் பல்கலைக்கழக நாடகப் பணியின் தொடர்ச்சியாக கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய பத்து நவீன வானொலி நாடகங்களின் தொகுப்பான கெட்டிக்காரர்கள் நூல். மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றது. இரண்டாம் பதிப்பு ரூபா 200. (48182)

## கிறிஸ்தவ பாட வழிகாட்டல் கருத்தரங்கு

கரவெட்டி, மார்ச்18

எதிர்வரும் க.பொ.த.(உயர்தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கிறிஸ்தவ பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் இன்றும் நாளையும் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய பணிமனையில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி பிரதேசங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மாணவர்கள் இதில் கலந்து பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-70-204)


## தேவை

உணவு பரிமாறுபவர்
உடன் நேரில் வரவும்.
**SKY LINE RESTAURANT**
198, KASTHURIYAR ROAD, JAFFNA.
T.P : 021 222 7539
(48185)

## REFRESH SYSTEM

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: (021 4591818, 077 3253104, 077 6279671)
(47878) **சுதுமலை,மானிப்பாய்.**

# மரண அறிவித்தல்



## முத்துவேலு சிவசேகரம்

*(மாலியவத்தை, சங்கானை)*

மயிலிட்டி தெற்கு, கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மாலியவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு சிவசேகரம் (ஓய்வூதியர், படவரைஞர், நீர்ப்பாசன இலாகா) அவர்கள் 14-03-2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு-பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும், மலர்தேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, விக்ரோறியாக் கல் லூரி, சுழிபுரம்) அவர்களின் அருமைக் கணவரும் கோபிகிருஷ்ணா, கோகுலகிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபூபதி, தர்ம பூபதி (ஓய்வுபெற்ற இசை விரிவுரையாளர், கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை), தர்மசேகரம், ஜெயபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலகதாஸ் (நாடாளுமன்றம், கொழும்பு), திருமதி லீலாதேவி திலகதாஸ் (சகோதரி), தம்பிப்பிள்ளை, டாக்டர் சிதம்பரநாதன் (அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி), தயானி, குணசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19-03-2006) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மாலியவத்தை,**
**சங்கானை.** (சி/48404)(26.19.14)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**


5 ஆம் வருட நிறைவில்

அன்பான எம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் வாணி ரெக்ஸ் இன் வளமிகு நன்றிகளைத் தெரிவிப்பதோடு,

6ஆவது ஆண்டில் கால்பதிக்கும் வாணி முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டு, குளிர் ஊட்டப்பட்ட காட்சியறையில் தன்னலமற்ற தனது சேவையின் ஓர் அடிக்கல்லாக 15ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை ரூபா 5000/= இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய சுவர்மணிக்கூடு அல்லது அழகிய குடை என்பன இலவசமாக வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



**வாணி ரெக்ஸ்**
No. 81, Grand Bazaar, Jaffna.
T.P.: 021 222 5578, 9286



## தர்மபுரம் மகா வித்தியாலய போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி,மார்ச்18

தர்மபுரம் மகாவித்தியாலய கணித மாணவர் மன்றத்தினரால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட "உங்களால் முடியுமா? முயன்று பாருங்கள்" என்னும் தலைப்பிலான திறந்த போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

கெ.பிருந்திகா (இராமநாதபுரம் ம.வி.), மு.தர்சிகா (வட்டக்கச்சி ம.வி.), அ.சுகிர்தன் (முருகானந்தா ம.வி.).

சிறப்பு பரிசில் பெறுவோர் விவரம் வருமாறு:-

யோ.லூசியா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), மு.ஜெயந்தினி (உடையார்கட்டு ம.வி.), க.ஜனுப்பிரியா (திருவையாறு ம.வி.), க.றஜீதா (பெரியகுளம் ஐயனார் வித்தி.), வி.றஜீந்தன் (கண்டாவளை ம.வி.), சி.நிரோசன் (தர்மபுரம் ம.வி.).

செ.சகிதா (நாகேஸ்ரா வித்தி.), சி.கிர்ஷந்தினி (கிளிநொச்சி ம.வி.), யே.ஜனனி (விசுவமடு ம.வி.), ப.இலாவணியன் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை).

(எ-405-203)

## பாடசாலை முன் குறியீடு அமைத்துத் தர கோரிக்கை

புதுக்குடியிருப்பு, மார்ச்18

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு முன்பாக பிரதான வீதியில் பாடசாலைக் குறியீடும் பாதசாரிக் கடவையும் அமைத்துத்தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பாடசாலையின் மாணவர்கள், பாடசாலை ஆரம்ப நேரம் மற்றும் முடிவடையும் நேரங்களில் வீதியைக் கடந்து செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறான நிலைமை வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமாகிவிடுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனவே, பாடசாலைக் குறியீடும் பாதசாரிக் கடவையும் அமைத்துத் தர உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(எ-353-204)

## வவுனிக்குளத்தில் 1,575 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை நடக்கும்

மல்லாவி,மார்ச்18

வவுனிக்குளத்தில் நீர் விநியோகத்திற்குட்பட்ட பகுதிகளில் ஆயிரத்து 575 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வவுனிக்குள நீர் விநியோகத்திற்குட்பட்ட பகுதிகளில் சிறுபோக நெற்செய்கை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணுக்காய் உதவி அரச அதிபர் நா.நந்தகுமார், பாண்டியன்குளம் உதவி அரச அதிபர் ஜெகூ உட்பட இப்பகுதியைச் சேர்ந்த காணி அதிகாரிகளும், விவசாயப் போதனாசிரியர்களும், கமக்கார அமைப்புகளின் தலைவர்களும், திட்டக் குழுத்தலைவர்களும் கலந்துகொண்டனர்.

(எ-322-203)

## பொதுமண்டபம் திறந்து வைப்பு

மல்லாவி, மார்ச்18

துணுக்காய் பிரதேசத்திலுள்ள திருநகர் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிகொட் நிதியுதவியுடன் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டபத் திறப்புவிழா கடந்த மாதம் நடைபெற்றது.

துணுக்காய் உதவி அரச அதிபர் நா.நந்தகுமார் மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

(எ-322-203)



கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், மாணவி ஒருவருக்கு அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளார் மாலை அணிவித்து பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- பரந்தன் செய்தியாளர்)*

## நாகதம்பிரான் ஆலயத் திருவிழாவுக்கு இம்முறையும் வழமைபோன்று ஏற்பாடு

பரந்தன்,மார்ச்18

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத் திருவிழாவை இம்முறையும் வழமைபோன்று சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா அடுத்த மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழா ஒழுங்கமைப்பு, ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் கடந்த 15ஆம் திகதி நாகதம்பிரான் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வருடாந்தப் பெருந்திருவிழா முன்னேற்றபாட்டு நடவடிக்கைகள், ஒழுங்கமைப்புச் செயற்பாடுகள், திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதில் கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்கள உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், தமிழீழ சுகாதார சேவையைச் சேர்ந்த பிரதிநிதிகள், அரச சுகாதார சேவை அதிகாரிகள், தமிழீழக் காவல் துறையின் அதிகாரிகள், கீரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர், கண்டாவளை பிரதேச செயலக அதிகாரிகள்,ஆலய பரிபாலன சபையினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(எ-352-204)

வன்னிச் செய்திகள் கிளிநொச்சி முல்

## செம்பியன்பற்றில் 40 பேருக்கு நுண்கடன் திட்ட உதவிகள்

பரந்தன், மார்ச்18

வடக்கு -கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவை நிறுவத்தினர், யாழ்.வர்த்தகர் கைத்தொழில் மன்றத்தின் நிதியுதவியுடன் செம்பியன்பற்று கிராமத்தில் 40 பயனாளிகளுக்கு நுண்கடன் திட்ட உதவியொன்றை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வு அண்மையில் செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையில் செம்பியன் பற்று கிராமசேவையாளர் வி.நடராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ்.வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம், கிராமிய அபிவிருத்தி வங்கிப் பொதுமேலாளர் தவக்குமார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை ஆகியோர் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினர்.

இதில் 40 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டதுடன் 5 ஆயிரம்ரூபா மானியமாகவும் வழங்கப்பட்டது.

செம்பியன்பற்றில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பின்றி இருக்கும் மக்களில் 40 பேருக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

(எ-352-203)



முழங்காவில் இரணை மாதாநகர் சொக்கலிங்கம் பூங்கா சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பூங்கா நிர்வாகி அ.பிரன்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறுவர்களுக்கு சேமிப்புக் கணக்கு கையேடும், உண்டியல்களும் வழங்கப்பட்டன.

சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்ட பின்னர், சிறுவர்கள் உண்டியல்களுடன் இருப்பதைப் படத்தில் காணலாம். *(படம்:-வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையின் ஆண்டுவிழா நிகழ்வு சிறப்புற நடைபெற்றது

ஒட்டுசுட்டான்,மார்ச்18

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை திலீபன் மருத்துவமனை வளாகத்தில் சிறப்புற நடைபெற்றன.

திலீபன்மருத்துவமனை அபிவிருத்திக் குழுத் தலைவர் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக திலீபனது திருவுருவப்படம் மருத்துவமனை முதலுதவி அணியினரின் அணிவகுப்பு மரியாதையுடன் விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டது.

தொடர்ந்து பொதுச்சுடரை புனிதபூமி சிறுவர் இல்லப் பணிப்பாளர் ஜீவராஜ் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை திலீபன் மருத்துவமனை நிர்வாகப் போராளி புலிமறவன் ஏற்றிவைத்தார்.

திலீபனின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை மருத்துவ கலாநிதியும் ஆலோசகருமான அருந்ததி ஏற்றினார். மலர்மாலையை திலீபன் மருத்துவமனைக்கு நிதியுதவி செய்த சுவீடன் நாட்டில் வசிக்கும் எதிர்வீரசிங்கம் அணிவித்தார்.

கருத்துரைகளை முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் அணியழகன், கிராமசேவை அலுவலர் சோமசுந்தரம், ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம், நா.வன்னியசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

முத்தையன்கட்டு ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஒட்டுசுட்டான் அழகக சங்கம் என்பன தமிழீழத் தேசியத் தலைவருக்கான வாழ்த்து மடல், கேடயம் என்பனவற்றைக் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

(எ-352-341-204)

## தவக்காலச் சிந்தனை 18

### நன்றியால் இறைவன் புகழ்பாடுவோம்

எமது அன்றாட தேவைகள், விண்ணப்பங்கள், மனச்சுமைகள், கண்ணீர்களை இறைவனிடம் எடுத்துக் கூறி மன்றாடுகின்றோம்.

அவரது கருணையால் பல நன்மைகளையும் வரங்களையும் பெறுகிறோம். கேட்டவை கிடைத்ததும் கடவுளை மறந்துவிடுகிறோம். நன்றியற்ற வாழ்க்கை நரம்பில்லா வீணைக்கு ஒப்பாகும்.

கணப்பொழுது கூட எம்மை மறவாது தேவையான அனைத்தையும் பல்வேறு வழிகளில் வழங்கிக் கொண்டிருக்கும் தேவனுக்கு நன்றி கூறும் பழக்கம் ஏன் எம்மில் வளரவில்லை?

'அனைவருக்காகவும் மன்றாடுங்கள்; இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்து பேசுங்கள்; நன்றி செலுத்துங்கள்.'

(1 திமொத் 2:1)

உணவு, உடை,உறையுள், அறிவு, ஆற்றல், பாதுகாப்பு, நல்உறவுகள், பிறர் அன்பு, உதவிகளைத் தந்து எமது தேவைகளைப் பலர் வழியாக நிறைவு செய்து வரும் இறைவனின் ஒப்பற்ற அன்புக்காக எந்நேரமும் நன்றி கூறுவது கடமையாகும்.

இன்பத்திற்கு மட்டுமல்லாது துன்பவேளையிலும் நன்றி செலுத்துவோம். ஏனென்றால் துன்பங்கள் எம்மை வழிப்படுத்த, பேராபத்திலிருந்து காக்க அவர் தரும் சந்தர்ப்பங்களே. நன்றிப் புகழ் பாடும்போது இறைவன் பூரிப்படைந்து மேலும் பல நன்மைகளையும் பொழிவார். பொன், பொருள் காணிக்கைகளை விட நன்றித் தனத்தையே இறைவன் முதலில் ஏற்றுக்கொள்வார். வல்லவரின் புகழ்பாடி தொல்லைகள் நீங்கி வாழ்வோம்.

-எஸ்.யேசுதாஸ்

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சி இம்முறை பாரிய வெற்றியினைப் பெறும்

## அதன் பிரதிப் பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 18

"எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பாரியளவில் வெற்றி பெறப்போவது உறுதியாகிவிட்டது. அதே நேரத்தில் தனித்தனியாகப் போட்டியிடும் ஜே.வி.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் படுதோல்வியடையப் போகின்றன.

"அதுமட்டுமன்றி விரைவில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசும் கவிழ்ந்துவிடும். அதற்கான நடவடிக்கைகளில்தான் ஜே.வி.பியினர் ஈடுபட்டுள்ளனர். இது விரைவில் நடக்கும்"

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்றபின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் ஆட்சி அமைக்கும் என ஜே.வி.பியினர் பிரசாரம் செய்துவருகின்றனர். அப்படியென்றால் அவர்கள் இணைந்தே தேர்தலில் போட்டியிட்டிருக்கலாமே. இது மீண்டும் ஒருமுறை மக்களை ஏமாற்ற ஜே.வி.பியினர் நடத்தும் நாடகம்.

ஜே.வி.பியினர் முதலில் இந்த அரசுடன் கூட்டுச்சேர்ந்தனர். கூட்டுச் சேர்ந்து சிறிய காலத்திற்குள் அரசைவிட்டு விலகினர். பிறகு இரண்டாவது தடவையும் கூட்டுச் சேர்ந்தனர். திரும்பவும் சிறிது காலத்திலேயே அரசை விட்டு வெளியேறி முற்படுகின்றனர்.

அதற்கு ஆதாரமாக மஹிந்தவின் சமாதான முயற்சியை விமர்சித்து வருகின்றனர். எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகின்றனர்.

இவ்வாறு நிலையற்ற - ஒற்றுமையில்லாத, கொள்கையில்லாத ஜே.வி.பியினரால் உள்ளூராட்சி சபையைக் கூட ஆளமுடியாது. இந்த நிலையில் எப்படி இவர்களால் நாட்டை ஆளமுடியும்?

ஜே.வி.பியினரின் அரசியல் நடத்தைகளை இதுவரை காலமும் அவதானித்த மக்கள் இனிமேல் இவர்களை ஆதரிக்கத் தயாரில்லை.

ஜனாதிபதியின் சமாதான முயற்சிக்கு எதிர்க்கட்சியாகிய நாங்களே ஆதரவு வழங்குகின்றபோது ஆட்சியின் பங்காளிகளான ஜே.வி.பியினர் எதிர்த்து நிற்கின்றனர். இவ்வாறானவர்களை எப்படி மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்?

இவர்களின் திட்டம் மஹிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்ப்பதுதான். அதுவிரைவில் நடக்கும். அதை யாராலும் தடுக்க முடியாது.

இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது.

அனேகமான உள்ளூராட்சி சபைகளை நாம் மீண்டும் கைப்பற்றுவோம்.

- என அவர் கூறினார். (க-07)

# ஆனைக்கோட்டையில் சிறுதானியச் செய்கை ஆரம்பம்

## கால்நடைகளைக் கட்டிவளர்க்குமாறு அறிவுறுத்து

நாவலி,மார்ச்18

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் தமது ஆடு, மாடுகளைக் கட்டிவைத்து வளர்க்க வேண்டும் என்று அப்பகுதிக்கான கிராம சேவையாளர் வை.சந்திரராசா அறிவித்துள்ளார்.

பிரதேசத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 13ஆம் திகதி ஆனைக்கோட்டை மகாஜனா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது பெய்துவரும் மழையையடுத்து மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த சிறுதானியச் செய்கையாளர்கள் எள்ளுப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர் என்றும் -

இந்த வேளையில் ஆடு, மாடுகள் கட்டாக்காலிகளாகத் திரிவதால் பயிர்கள் நாசமாகின்றன என்றும்-விவசாயிகள் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து ஆடு, மாடுகளைக் கட்டாக்காலியாகத் திரியவிடாது கட்டிவைத்து வளர்க்குமாறு மிருகவளர்ப்பில் ஈடுபடுவோர் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

அவ்வாறு கட்டாக் காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகளைப் பிடித்து கிராம சேவகர் அல்லது விவசாய சம்மேளனத் தலைவரிடம் ஒப்படைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-100-202)


சேவை நலன் பாராட்டு

திரு. கந்தையா கனகசபை

(முகாமையாளர் - இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)



38 வருடங்கள் இலங்கை வங்கியில் நற்பணி புரிந்து 17-03-2006 இல் ஓய்வுபெறும், அவர் தம் உயர்ந்த சேவையைப் பாராட்டுவதுடன், 60ஆவது பிறந்த தினத்தில் (18-03-2006இல்) சகல நலனும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(48216)

இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை.



ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7470409 முதல் 7480187 வரை. சீட்டிழுப்பு இல. 220 திகதி 16-03-2006

வெற்றி எண்கள்

3 2 0 2 6 2 — சுப்பர் எண் 01

ஜக்பொட் பரிசு ரூ. 10,472,325/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,472,325/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 83 | 5,000/= | 415,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 839 | 500/= | 419,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8388 | 50/= | 419,400/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 83115 | 10/= | 831,150/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 83 | 1,000/= | 83,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 842 | 100/= | 84,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8307 | 20/= | 166,140/= |
| | | மொத்தம் ரூ. | 3,913,390/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,515,990/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 7471465-9-63 |
| நுவரேலியா | 7472125-8-85 |
| பொலன்னறுவ | 7471571-1-20 |
| புத்தளம் | 7471257-5-98 |
| பதுளை | 7472305-6-76 |
| குருணாகல் | 7476892-0-52 |
| திருகோணமலை | 7472613-0-40 |
| மாத்தறை | 7471962-2-89 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 10,705,525/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


# சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,மார்ச்18

நல்லூர் மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் திருவிழா நாளை மறுதினம் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 5 திங்களும் விசேட திரு விழா இடம்பெறும். (3-203)

★ ★ ★

சுழிபுரம்,மார்

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா கடந்த 14ஆம் திகதி விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 7 நாள்கள் விசேடபூசைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி முதலாம் பொங்கலும் 28 ஆம் திகதி இரண்டாம் பொங்கலும் நடைபெறும். (3-24-203)

★ ★ ★

கொழும்புத்துறை,மார்ச்18

கோப்பாய் வடக்கு புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நவநாள் ஆராதனைகளுடன் நடைபெற்று வருகிறது.

இன்று மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறும். (203-30)


குருக்கள் தேவை

நவாலி, அந்திரான் முருகமூர்த்தி கோயிலுக்கு நித்திய நைமித்திய பூசைகள் நடத்துவதற்கு ஒரு குருக்கள் தேவை. விண்ணப்பிப்பவர் கோயிலுக்காக உள்ள வீட்டில் குடியிருக்க கூடியவராக இருத்தல் வேண்டும். சம்பளம் முதலியன நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (48203)

அந்திரான் முருகமூர்த்தி கோயில், நவாலி தெற்கு, மானிப்பாய். (26.15.11)

ஆலய பரிபாலன சபை.



Organ / Violin Notes

200 சினிமாப்பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் விற்பனையாகின்றன.

Karaweena Isai Manram

75, Temple Rd, Jaffna T.P : 0713055991

(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 m தெற்கே)


### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சாவகச்சேரி, மார்ச்18

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தைச் சூழவுள்ள மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் இன்று காலை 9 மணிக்கு கட்டாக்காலி நாய்கள் அழிக்கப் படவுள்ளன.

மட்டுவில்பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்பார்வையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (எ-31)

### பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்18

சாவகச்சேரி அருணோதயக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சபைத் தலைவர் கி.மகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-202)

✱ ✱ ✱

இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)


Vacancy

பருத்தித்துறை வீதியில் நல்லூர், கோப்பாய், ஆவரங்கால், பருத்தித்துறை நிலையங்களில் கடமையாற்றுவதற்கு நேரக் கணிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

இவ்விடங்களுக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எதிர்வரும் 22.03.2006 இற்கு முன்னர் காரியாலயத்திற்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றனர்.

50/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (48212)

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம்.



31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 - 10 - 1933



மறைவு 17 - 02 - 2006

அந்தோனிப்பிள்ளை மரியராஜா

(ஓய்வு பெற்ற இராணுவக் கோப்ரல், முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

மறைந்து மாதம் ஒன்று மறக்காது எமது உள்ளம் உங்களை. என்றும் இனிய வார்த்தை பேசும் எம் இனிய தெய்வம் மறைந்த செய்திகேட்டு நேரில்வந்தும், தொலைபேசி, கடிதங்கள் மூலம் எமக்கு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், எமது இனிய தெய்வத்தின் இறுதி யாத்திரை நடைபெற்றபோது இங்கு நேரில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், பல உதவிகள் புரிந்தோருக்கும், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், இரங்கல் உரை நிகழ்த்தியோர். எமது துயரில் பங்கு பற்றிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (19.03.2006) ஞாயிற்றுக்கிழமை இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் 20.03.2006 திங்கள் காலை 7 மணிக்கு மல்லாகம் புனித சவேரியார் ஆலயத்தில் அன்னாரின் இளைப்பாற்றிற்காக நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

குளமங்கால் மல்லாகம்.

(48220) (54-11)

றாத் புஸ்பராணி (மனைவி), பிள்ளைகள்.

# வன்னி அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் வி.க. சம்பியனானது

யாழ்ப்பாணம்,மார்ச்18

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் வன்னி மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்திய அமரர் கணேஸ் ஞானலஷ்மி ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி சம்பியனானது.

கடந்த 8ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை இடம்பெற்ற இச்சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 24 அணிகள் பங்குபற்றின.

அரையிறுதிப்போட்டியில் முல்லைத்தீவு விக்னேஸ்வரா அணியை எதிர்த்து ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணியும் மோதின. இதில் விக்னேஸ்வரா அணியும் லக்கிஸ்ரார் அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.


இறுதிப்போட்டி கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றது. காட்சிப் போட்டியாக கிளிநொச்சி அரும்புகள் அணியும் உழவர் ஒன்றிய இளையோர் அணியும் மோதிய ஆட்டம் முதலில் இடம்பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப்போட்டி ஆரம்பம்முதலே மிக விறுவிறுப்பாக அமைந்தது.

ஆட்டத்தின் இடைவேளையின்போது விக்னேஸ்வரா ஒரு கோல் போட்டு முன்னிலையில் நின்றது. இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமான கையோடு லக்கிஸ்ரார் அணியும் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமநிலைப்படுத்தியது. ஆட்டம் சமநிலையில் முடிவுற்றதால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதில் லக்கிஸ்ரார் அணி மேலும் ஒரு கோல் போட்டு 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக்கேடயத்தைத் தனதாக்கிக்கொண்டது.

போட்டித் தொடரின் சிறந்த வீரனாக லக்கிஸ்ரார் அணி வீரர் டினோசனும் சிறந்த கோல் காப்பாளராக விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகக் கோல் காப்பாளரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பரிசில்களையும் வெற்றிக் கேடயத்தையும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழகன், உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் கணேசதாசன், அமரர் கணேஸ் ஞானலட்சுமியின் புதல்வர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (3-202)



பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி கிருபாசக்தி சிவராஜா தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் இடம்பெற்ற மாணவியரின் உடற்பயிற்சிக் கண்காட்சியைப் படத்தில் காணலாம்.
(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்.

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் மற்றும் சனசமூக நிலையம் நடத்திவரும் 'விக்ரம் ராஜன் கங்கு' ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 8.30 மணி - கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க. எதிர் யாழ். பல்கலைக்கழக வி.க.
* பிற்பகல் ஒரு மணி - மானிப்பாய் பரிஸ் வி.க. எதிர் யாழ். ஜொலிஸ்ரார் வி.க.

(3-202)

## மல்லாவி ம.வி. முதலிடம்

மல்லாவி, மார்ச் 18

துணுக்காய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

துணுக்காய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மல்லாவி மத்திய கல்லூரி 480 புள்ளிகளையும் யோகபுரம் மகா வித்தியாலயம் 216 புள்ளிகளையும் துணுக்காய் அ.த.க. பாடசாலை 122 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

(3-322-203)

## மைதானம் புனரமைப்பு

புதுக்குடியிருப்பு, மார்ச் 18

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் 400 மீற்றர் கொண்ட புதிய விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. புதிய அதிபராகப் பதவியேற்ற பெ.க.சிவலிங்கம் தலைமையில் இந்த மைதானம் அமைப்பு நடைபெற்று வருகிறது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பழைய மாணவர்களும் விடுமுறை நாள்களில் சிரமதானம்மூலம் பற்றைகள், மரங்களை வெட்டி நிலத்தினை சமப்படுத்தி மைானத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே உள்ள மைதானம் பெரிய அளவில் போட்டிகள் நடத்துவதற்குப் போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (3-353)

## சிறுவர் இல்லங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

பரந்தன்,மார்ச்18

கிளிநொச்சி,கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட சிறுவர் இல்லங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி க.சுலோசினியால் பிரதேச செயலகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட மேற்படி விளையாட்டு உபகரணங்களை அன்புச் சிறுவர் இல்லம், குருகுலம் சிறுவர் இல்லம், மகாதேவ சிறுவர் இல்லம், கருணா நிலையம், அகில இலங்கை காந்தி சேவா நிலைய சிறுவர் இல்லம் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளிடம் கரைச்சிப் பிரதேச செயலர் கையளித்தார்.

(3-352)

## சாத்னை முறியடிக்க முனைந்த மாணவனின் கை முறிந்தது

தென்மராட்சி,மார்ச்18

15 வயதுப் பிரிவில் தடியூன்றிப் பாய்தல் போட்டியில் வலயமட்ட சாதனையை முறியடிக்க முயன்ற மாணவன் தவறிவீழ்ந்தபோது கை முறிந்தது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

வலய மட்டப் போட்டிகளில் முதலிடத்தைப்பெற்ற இந்த மாணவன் முன்னைய வலயமட்டச் சாதனையை முறியடிக்கப் பாய்ந்தபோது குறுக்குக் கம்பிக்குள் கால் சிக்கி வீழ்ந்து கை முறிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவனான அம்பிகைராசா லக்ஸன் (வயது 14) என்பவருக்கே கைமுறிந்தது.

இந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

(3-117)

## சென்.பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரி 18ஆவது ஒருநாள் போட்டி இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்18

ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்திற்கான 18ஆவது மட்டுப்படுத்தப்பட்ட - 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட - யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

இதுவரையில் நடைபெற்ற போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 12 போட்டிகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரி 5 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

இம்முறை சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு டபிள்யூ.ஐ.ஜக்சனும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு என்.ஜெனார்த்தனனும் தலைமை வகிக்கிறார்கள்.

(3-190)

## அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். மாவட்டப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் - 13 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான - கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ளன. அரையிறுதி ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

* சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் - திங்கள் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.
* யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் - செவ்வாய் - யாழ். மத்திய கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி.

(3-190)

## மெய்வன்மைப் போட்டிகள்

நல்லூர்,மார்ச்18

நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.ரூபசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் பூ.குகதாசனும் சிறப்பு விருந்தினர்களாக காந்தி சனசமூக நிலையத் தலைவர் க.கிருஷ்ணகுமார், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் கா.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-111)

*** ***

தென்மராட்சி,மார்ச்18

நாவற்குழி சிவமணி முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்வார். (3-117)

## கூடைப்பந்தாட்டம்

பரந்தன்,மார்ச்18

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் லீக் முறையிலான ஆண், பெண் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணி - யாழ்.பல்கலைக்கழகம் வி.க. எதிர் கோப்பாய் வி.க.
* பிற்பகல் 4.30 மணி - பற்றீசியன்ஸ் வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க. (3-190)





## ஐயன்கன்குளம் பாடசாலை மூன்று பிரிவுகளில் முதலிடம்

மல்லாவி,மார்ச்18

துணுக்காய் கோட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் 15 வயதின் கீழ் பெண்கள், 17வயதின் கீழ் பெண்கள், 19 வயதின் கீழ் பெண்கள் ஆகிய மூன்று பிரிவுகளிலுமே ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை வெற்றி பெற்றது.

(3-322-203)



அக்கராயன், யூனியன்குளம் வானதாரகை விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)




## செஞ்சிலுவை அலகு அங்குரார்ப்பணம்

குருநகர்,மார்ச்18

ஊர்காவற்றுறை, தம்பாட்டிக் கிராமத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை அலகு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பிரிவின் தலைவர் எஸ்.[illegible] தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்த அலகின் தலைவராக நா.திருச்செல்வம், செயலாளராக ததுரையன்,பொருளாளராக சி.இராமச்சந்திரன் ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இரு பெண் உட்பட ஐவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-51)

# Vacancies

***World Vision** is an International, Christian humanitarian, relief and development agency working in more than 100 countries in the World. We are a "Partnership" of more than 100 national entities and are in consultative status category II with the United Nations Economic & Social Council.*

***World Vision** in Sri Lanka requires, suitable qualified candidates for the following positions.*

### ZONAL FINANCE COORDINATOR/ASSISTANT ACCOUNTANT-JAFFNA

To ensure high level of financial accountability and integrity at relief offices in accordance with World Vision financial policies and procedures in areas such as budget, cash management, recording, documentation, financial reporting and other financial related areas.

**The position requires,**

- Bachelor's degree in accounting and/or full/part qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ACA), Chartered Institute of Management Accountants of UK (CIMA), Certified Management Accountants of Sri Lanka (CMA), or Association of Chartered Certified Accountants (ACCA) with 5-7 years accounting experience. Candidates with managerial experience will be preferred. For Assistant Accountant less experience enough.
- High level of computer skills, including the use of Microsoft Windows 2000 /XP, Lotus Notes, internet and various software applications and databases used in work efforts.

### POST OF DISTRICT MANAGER-JAFFNA

To provide operation and administration leadership in the district and ensure program coordination between relevant Sectors/Technical Teams.

*Personal Profile*

- Should possess a relief and development mindset preferably with a degree in development or related field
- At least five to eight years field experience especially in Program Development context
- Project management experience (including staffing and financial management) preferred
- Demonstrable leadership abilities
- Experience in project design, implementation, monitoring, evaluation and report writing will be of added advantage
- Strong organizational skills and the ability to work under pressure
- Ability to function well within a team environment and effectively contribute towards team efforts
- Fluent English with excellent written and oral communication skills
- Good interpersonal skills and cross-cultural sensitivity
- Requires emotional maturity and adaptability to live in difficult conditions.

### POST OF WAREHOUSE SUPERVISOR /ASSISTANT – JAFFNA / MULLALAITIVU

The purpose of this position is to ensure proper and safe custody (storage) of all food commodities entrusted to the area of WV by donors. Documentation of transactions of the warehouse, including receipt, storage and delivery of all commodities.

**Personal Profile:** This position requires a mature candidate, a self-starter, with dedication and ability to work with less or no supervision. Must demonstrate willingness to learn and work with others as a team.Prospective candidates should have a minimum of a High School Level education with some basic training in storekeeping and proven relevant experience. Candidates with college diplomas and a University Degree will have added advantage.Candidates should also have at least 2 years' experience in a related field preferably with an NGO working in Commodity programming and logistics. Good command of oral and written English a must.

**World Vision Lanka offers attractive remuneration package, based on individual competence and skills. If you are a person who meets the above requirements and are willing to work with the poor and the oppressed, sometimes in difficult conditions, Please apply within a week of this advertisement with your CV, contact No., names and addresses of three non-related referees to:**

World Vision Lanka Tsunami Response Team
Human Resources Department (Northern Zone),
227, 3rd Cross Street,
Jaffna.
Fax : 021 222 9605

World Vision

(C/48390)

**All offers of employment are made contingent upon the successful completion of all applicable background checks, including criminal record checks.**

**World Vision is committed to the protection of children and does not employ staff whose background is not suitable for working with children.**

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 08 - 1984



மறைவு 22 - 03 - 2003

### கந்தசாமி சுஜிந்தன்

ஆண்டுகள் மூன்று சென்றாலும் - உன்
அன்பு முகம் எம் நெஞ்சைவிட்டகலவில்லை
ஓடி வருவாயா எம்முடன் உறவாட
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
(48163)(32-15-45)

-குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 - 02 - 1922

உதிர்வு 28 - 03 - 2005

### திருமதி சௌந்தரம் இராமலிங்கம்

பாசமுடன் வாழ்ந்த
பசுமையான நினைவுகள்
காலங்கள் பல கடந்தும்
கலையாத கனவுகளாய்
எம் கண்களோடு கலந்து இருக்கும்...

(48167)(32-15-45)
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 02 - 01 - 1976



மறைவு 29 - 03 - 2005

### திருமதி ஜெயகாந்தன் ஜெயக்குமாரி

(ரஞ்சி)

திதி: 18.03.2006

ஓராண்டு ஓரிரு நாள்கள் போலக் கரைந்து விட்டது
கரைந்த ஆண்டுகள் பல்லாண்டுகளானாலும்- நீ
விட்டுச் சென்ற பாசப் பிணைப்புக்கள்
விடுபடுவதில்லை!
ஓர் உயிரின் பிறப்பிற்காய் உயிர் துறந்த உத்தமியே
ஆறாத் துயருடன் தவிக்கும் உன் உறவுகள்

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(48168) (89-82-16-46)

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

# கொடிகாமம் ஆஸ்பத்திரியில் புதிய கட்டடம் திறப்பு

சாவகச்சேரி,மார்ச் 18

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் ஆண்கள் சிகிச்சை விடுதி மற்றும் சுகாதார சேவைக் கட்டடம் என்பன எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளன.

கொடிகாமம் வைத்தியசாலை அபிவிருத்தி சபைத் தலைவர் அ.திருநாவுக்கரசு தலைமையில் திறப்புவிழா நடைபெற வுள்ளது.

பிரதம அதிதியாக பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தா.சிவபாதமும் சிறப்பு விருந்தினராக சிறுவர் பாது காப்பு நிதிய அபிவிருத்தி முகாமையாளர் கா.மகேந்திரனும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரனும் கலந்துகொள்வர். (ஐ-31)

# மேலும் சில கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகம்

தென்மராட்சி,மார்ச் 18

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் சில கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளன.

மட்டுவில் வடக்கு, சரசாலை வடக்கு, மந்துவில் ஆகிய கிரா மங்களுக்கே மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை -

கச்சாய் கிராமத்திற்கான மின் விநியோக வேலைத் திட்டங் கள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அக்கிராமத்திற்கும் மின்சாரம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# ஆலயத்துக்கு அடிக்கல்

கொழும்புத்துறை,மார்ச் 18

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் புதிதாக புனித சூசை யப்பர் ஆலயத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அடிக்கல்லை நட்டு வைப்பார்.

தற்போது இப்பகுதியில் இருக்கும் பழமை வாய்ந்த ஆலயத்திற் குப் பதிலாக பிறிதொரு இடத்தில் புதிய ஆலயம் அமைக்கப் படவுள்ளது.

பழைய ஆலயத்தை அமலமரித் தியாகிகள் சபையினர் பொறுப் பேற்றுத் தமது சொந்த ஆலயமாக அவ்விடத்தில் புதிய கோவிலை கட்டவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-30)

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை விளம்பரத்தில் திருத்தம்

பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள் ஊடான வீதி புனர்நிர் மாணம் தொடர்பாக நேற்றைய உதயனின் 12ஆம் பக்கத் தில் இரண்டு கேள்வி கோரல் விளம்பரங்கள் பிரசுரிக்கப் பட்டிருந்தன.

அவற்றில் மானிப்பாய் - கைதடி வீதி (8+000 - 11+000) கிலோமீற்றர் பகுதியைப் புனர்நிர்மாணம் செய்வதற்காகக் கோரப்பட்ட கேள்வி விளம்பரத்தில் -

கேள்வி கோருபவர் தன்னை 'இக்ராட்' (ICTAD) நிறுவ னத்தில் வீதி நிர்மாணத்துறையில் **தரம் எம் - *05*** அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

நேற்றைய விளம்பரத்தில் தரம் எம் - 04 என்று பிரசுர மாகியிருப்பது தவறு ஆகும். அதனைத் திருத்தி வாசிக்க வும். (ஆ-ர்)

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க

## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் தலை வர் திரு. சி.சிவராசா அவர்கள் தலைமையில் எதிர் வரும் 19.03.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எனவே, ஓட்டோ உரிமையாளர், சாரதிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

*ஓட்டோ சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*
*(தலைமையகம்)* (48224)(17-33-49) **இவ்வண்ணம் நிர்வாகம்.**

## இளங்கலைஞர் மன்றம் வெற்றிடங்கள் - இசை ஆசிரியர்கள்

பின்வரும் துறைகளில் கற்பிப்பதற்கு தகுதிவாய்ந்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1) வாய்ப்பாட்டு 2) மிருதங்கம்
3) வயலின் 4) வீணை
5) நடனம் (பரதம்)

சங்கீத பூஷணம் N.C.O.H.S. (ஆசிரியர் தரம்) இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் இசைக்கலை மணி அல்லது சமமான சான்றிதழ்களுள் ஒன்றும் குறைந்த பட்சம் ஒருவருட கற்பித்தல் அனுபவமும் உடையவர் கள் விண்ணப்பிக்கலாம்.

**நியாயமான ஊதியம் வழங்கப்படும்.**

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசி நாள்:- 28.03.2006**

*இளங்கலைஞர் மன்றம்,*
*சட்டநாதர் வீதி, நல்லூர்.* (சி/48416) (17-33-49) பதிவாளர், இசைக்கல்லூரி.

# சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 18

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திருமதி சர் வேஸ்வரி ஸ்ரீகாந்தனின் சேவைநலன் பா ராட்டுவிழா நேற்றுக்காலை 10 மணியள வில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னதாக விழா நாயகி சண்டிலிப்பாய் காளி அம்பாள் ஆலயத்திலிருந்து 'பாண்ட்' வாத்தியம் சகிதம் கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

வரவேற்புரையினை கல்லூரியின் உப அதிபர் க.கேதீஸ்வரன் நிகழ்த்தினார். தொடர்ந்து சண்டிலிப்பாய் கல்விக்கோட் டப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் ச.சிவநேஸ்வரன், கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் ச.கந்தசாமி ஆகியோர் வாழ்த் துரையாற்றினார்கள்.

இறுதியாக விழா நாயகி திருமதி சர் வேஸ்வரி ஸ்ரீகாந்தனுக்கு தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டது.(ஐ-13)

# தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 18

சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் நடத் தப்படவுள்ள சிறந்த தலைமைத்துவம் தொடர் பான பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றக் கேட்போர் கூடத்தில் மன்றத்தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறந்த தலைமைத்துவம் தொடர்பாக வணி கத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவ ராஜா கருத்துரை வழங்குவார்.

இந்நிகழ்வில் கழக அங்கத்தவர்களும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிக ளும் கலந்துகொள்வர். (ஐ-203)

# பண்பு விருத்தி விளையாட்டு விழா

மானிப்பாய்,மார்ச் 18

மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையின் வருடாந்த பண்பு விருத்தி விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியள வில் நடைபெறவுள்ளது.

சத்திய சாயி பாடசாலையின் அதிபர் திரு மதி பீ.பத்மநாதன் தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் வலிகாம் வலயக் கல் விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் இலங்கை பாலவிகாஸ் தேசிய இணைப்பாளர் திருமதி சாந்தா மகேந் திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-13-90)

## எமது வீடியோ CD வெளியீடுகள்

* தாய் உள்ளம்
* ஒரு இனிய உதயம்
* பாட்டாளி மகன்
* மயங்குகிறாள் ஒரு மாது
* தேவர் வீட்டு பொண்ணு
* நிலவே மலரே
* உரிமை கீதம்
* செம்மீன்
* மைடியர் லிசா
* எங்கஊரு ராசாத்தி
* அதிரடி போலீஸ்
* தோழர் பாண்டியன்
* ராஜா வீட்டு பிள்ளை
* பதில் சொல்வாள் பத்ரகாளி

(48226)(17-33-49)

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

**நாகர்ஸ்** சுன்னாகம்

ஜெயம்ரவி, காம்னா, பிரகாஷ்ராஜ்



**இதயத் திருடன்**

காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00

**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

**மெக்குரிப் பூக்கள்**

காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.00, 6.00, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

இன்றுமுதல்
ரஜனிகாந்த், ரோஜா, ராதாரவி நடித்த

**உழைப்பாளி**

காட்சிநேரம்: 10.00, 1.30, 4.30 (பு.நே.)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 03.03.2006 இல் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட மூன்றாம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த

**திருமதி அன்ரனி அமிர்தநாதன் மேரிமற்றில்டா (தங்கராணி)**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல அரிய சேவைகளை எமது சமூகத்திற்கு ஆற்ற இறையருள் வேண்டி நிற்கும் -

(48222)(17-33-49)

*முத்துமாரி நகைமாடம்,*
*இல.78, கஸ்தூரியார் றோட்,*
*யாழ்ப்பாணம். தொ.பே.021 222 8145* **உரிமையாளரும், ஊழியர்களும்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற இசை ஆசிரியை திருமதி **மலர்தேவி சிவசேகரம்** அவர்களின் அன்புக் கணவர்

**முத்துவேலு சிவசேகரம்** அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/48414) **யா/விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம், சுழிபுரம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லதம்பி இரத்தினம்



அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமா கக் கொண்ட திருமதி நல்லதம்பி இரத்தினம் அவர்கள் நேற்று (17.03.2006) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2006) சனிக்கிழமை அன்னாரின் இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தீர்த்தாங் குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி வீதி, பத்தமேனி,*
*அச்சுவேலி.* (48219)(18-34-49) **தகவல்: மகன், மகள்.**

### திருமதி பரிமளம் சீவரத்தினம்

காரைநகர் கணக்காளர் கண்டியைப் பிறப்பிடமாகவும் கருங் காலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் சீவரத் தினம் நேற்று (17.03.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சீவரத்தினம் (கடவத்தை வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் நாகரத்தினம் (ஆசி ரியர், ஹற்றன் ஹைலஸ்ட்ஸ் மகா வித்தியாலயம்), விஜயரத் தினம் (வவுனியா), காலஞ்சென்ற நாகேஸ்வரி, செல்வரத்தினம் (வெற்றிலையூர்), இரத்தினகுமார் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும் நகுலேஸ்வரி, வதனா (வீதி அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா), கிருஷ்ணபிள்ளை (த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), அருந்தவராணி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கனகம்மா, விசுவ லிங்கம், சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வைஷ்ணவி, கிருஷ்ணகாந்த், அஜித்குமார், லக்ஷிகா, கிருத்திகா, ருக்ஷிகா, தஷ்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் சம்பந்தர் கண்டி, காரைநகரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்ப லோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சம்பந்தர் கண்டி,*
*காரைநகர்.*
*தொ.பே. 021 2225281* (48228)(18-34-49) **தகவல்: சீ.நாகரத்தினம் (மகன்)**

### திருமதி பாக்கியம் செல்லத்துரை



கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் செல்லத்துரை அவர்கள் நேற்று (17.03.2006) வெள்ளிக்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம் வீதி,*
*தில்லையம்பதி,*
*கோண்டாவில்.* (48229)(17-33-49) **தகவல்: செ.குமாரசாமி (மகன்) (கலைப்பீட ஊழியர், யாழ். பல்கலைக்கழகம்.)**

### செல்வி விசாலாட்சி கந்தையா

கொக்குவில் கோயில் வீதி, நந்தாவில் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த செல்வி விசாலாட்சி கந்தையா (கிச்சி) அவர்கள் நேற்று (17.03.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம் பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருமதி தங்கரத் தினம் - வல்லிபுரம், நடராஜா, தியாகராஜா மற்றும் திருமதி பர மேஸ்வரி - வல்லிபுரம், திருமதி சரஸ்வதி - திருநாவுக்கரசு ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2006) சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தக னக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 97, கோயில் வீதி,**
**கொக்குவில்.** (48227)(17-33-49) **தகவல்: திருமதி தி.சரஸ்வதி.**

# ஈழத்தமிழர் பிரச்சினையில் அ.தி.மு.கவின் நிலைப்பாடு என்ன?

## அக்கட்சிப் பிரமுகர் காளிமுத்து விளக்கம்

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவின் நிலைப்பாடு என்ன? என்று அக்கட்சியின் அவைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கா.காளிமுத்து விளக்கம் அளித்துள்ளார்.

'றிடிப்' ஆங்கில இணையத்தளத்துக்கு கா.காளிமுத்து அளித்த செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகளை உங்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்களான வைகோ, திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் மறுமலர்ச்சி தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பிலான உங்கள் கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதாக அர்த்தமா?

**பதில்:** தமிழகத்தில் எதுவித ஆயுதக் குழுவினரது நடமாட்டமும் இருக்கக் கூடாது என்பதில் அம்மா (முதல்வர் ஜெயலலிதா) உறுதியாக உள்ளார். அனைத்துத் தமிழர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக உள்ளார்.

கேள்வி: அனைத்துத் தமிழர்களும் என்றால் தமிழ்நாடு மற்றும் இலங்கையில் வாழும் தமிழர்களையும் சேர்த்தா?

**பதில்:** ஆமாம். தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் வாழ்கின்ற தமிழர்களைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பது என்பதும் அனைத்துத் தமிழர்களை ஆதரிப்பது என்பதும் இரு வேறு விடயங்கள். எமது நண்பர்களான வைகோ, திருமாளவனும் கூட தமிழகத்தில் பயங்கரவாதிகள் நுழைவதை விரும்பமாட்டார்கள் என்றார் காளிமுத்து. (ஐ)

# வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் குறித்து தேர்தல்கள் செயலகத்தில் இன்று மாநாடு

ஏறாவூர், மார்ச் 18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான உயர்மட்ட மாநாடு இன்று சனிக்கிழமை காலை ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இம்மாநாட்டைக்கூட்டியுள்ளார். வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தெரிவத்தாட்சி அலுவலர்கள்,மாவட்ட செயலாளர்கள், உதவித்தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் இம் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதா? அல்லது பிற்போடுவதா? என்பது பற்றி இம்மாநாட்டின் முடிவில் தீர்மானிக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள், தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலைகள் என்பனபற்றி அதிகாரிகளின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் தேர்தல் ஆணையாளர் தனது இறுதித் தீர்மானத்தை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர் பாக முப்படை அதிகாரிகள் மற்றும் பொலீஸ்மா அதிபர் ஆகியோரை தேர்தல் ஆணையாளர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். வடக்கு- கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலைமைகள் பற்றியும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. (க-ஐ)

## சுழிபுரத்தில் குடிசைவீடு தீக்கிரை

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள வீதியில் அமைந் திருந்த குடிசை வீடு ஒன்று நேற்று முன்னிரவு தீப்பற்றி எரிந்தது. வீடு எரிந்த சமயம் வீட்டில் தங்கியிருந் தோர் காயம் எதுவும் இன்றித் தப்பினர்.

சட்டவிரோதமாகப் பெற்ற மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாகவே வீட்டில் தீப்பற்றியது என்று கூறப்பட்டது. (ஐ-24)

## மீன்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாசப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினோம்.

இச் சந்திப்பில் எதிர்வரும் 21ஆம் நாள் நள்ளிரவுவரை அரசுக்கு காலக்கெடு விதிக்கவும் 22ஆம் நாள் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மீன்பிடித் தடைகளை நீக்காதுவிடில் யாழ். மாவட்டத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அரசினாலும் ஜனாதிபதியினாலும் வாக்குறுதிகள் மட்டுமே வழங்கப்படும். செயற்பாடு தொடர்கதையாகவே நடைபெற்று வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக அனைத்துத் தமிழ்பேசும் மக்களும் ஒன்றிணைந்து ஒருமித்த எதிர்ப்பினை வெளிப்படுத்தவேண்டும் என்றார் எம்.கே.சிவாஜிலிங்கம். (ஐ-190)

## இராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு படைப்பிரிவினர் மத்தியில் உரை நிகழ்த்தியபோது -

நாட்டு மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் உரிய ஒரு கௌரவமான தீர்வைக் காண்பதற்காகவே புதிய அரசு சமாதானப் பேச்சில் ஈடுபட்டுள்ளது. அரசின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு செயற்பட வேண்டிய பொறுப்பு இராணுவத்தினருக்கு உள்ளது என்று கூறினார். (ஐ-190)

## நோர்வேயின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பான அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான அமைச்சராகத் தொடர்ந்தும் நான் செயற்படுவேன்.

அனுசரணைப் பணிக்கான விசேட தூதுவராக போவர் கடமையாற்றும் அதேசமயம், இரு தரப்புடனுமான முக்கிய தொடர்பாளராகக் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரே தொடர்ந்தும் பணிபுரிவார்.

சர்வதேச ரீதியிலான பிணக்குகள், முரண்பாடுகள், அவை தொடர்பான சமாதான எத்தனங்கள், அமைதித் தீர்வுகள். சர்வதேச சமரசப் பேச்சுகள் ஆகியன பற்றிய விடயங்களில் ஆழ்ந்த அறிவும், புலமையும், பரிச்சயமும், அனுபவமும் உள்ளவர் போவர். அவர் நோர்வேயின் சர்வதேச கல்வி ஆய்வு தொடர்பான ஒரு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் கூட.

மத்தியகிழக்கு, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பின்னணியில் முக்கிய ஆலோசகராக நின்று செயற்பட்ட அனுபவமும் உடையவர் அவர்.

- இவ்வாறு சொல்ஹெய்ம் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (க)

## நோர்வேக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண. வெக்வெல உதிததேரர் கருத்துத் தெரிவிக்கையில் :-

" நோர்வேத் தரப்பினர், தம்மை சமாதானத்தின் தூதுவர்களாகவும், அனுசரணையாளர்களாகவும் வெளியுலகுக்குக் காட்டிக்கொண்டு எமது நாட்டைத் துண்டாடுவதற்கு வழி வகுக்கிறார்கள். ஜெனீவாப் பேச்சுகளில் பங்குபற்றிய புலிகளை நோர்வேயினர் தமது நாட்டுக்கு அழைத்து அவர்களுக்கு செங்கம்பள வரவேற்புக் கொடுத்துள்ளனர். புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரமொன்றை வழங்குதே நோர்வேயினரின் குறிக்கோள். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகைய சக்திகள்மூலம் நாடு துண்டாடப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்" - என்றார். (ஐ-க)


அஞ்சல் உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: 18.03.2006-4 P.M.


சனி, ஞாயிறு, திங், புதன். 4-6 P.M.

திகழ் கல்வி நிறுவனம்

கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

G.A.Q. B.A. Part I (III)

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய கோர்ட்டஸி மாநகரத்தின் பல்தேசிய கலாசார விவகார மற்றும் குடிவரவு அமைச்சரான செனட்டர் அமாண்டா வன்ஸ்ரோன் அம்மையார் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடிய பொழுது எடுக்கப்பட்ட படம்.

# ஒருவரின் வாக்கு செல்லுபடியாவதற்கு சின்னத்திற்கு வாக்களிப்பது அவசியம்

## தேர்தல்கள் ஆணையாளர் விளக்கம்

கட்சியொன்றின் சின்னத்திற்கு அடையாளமிடாமல் விருப்பு வாக்குகள் மாத்திரம் அடையாளமிடப்பட்டால் அந்த வாக்கு செல்லுபடியற்றதாகக் கருதப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார். எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்கும் முறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே தேர்தல் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டின் மேற்பகுதியில் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்களும் அவற்றின் சின்னங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. சின்னங்களுக்கு அருகில் உள்ள வெற்றுக் கூட்டில் தமக்கு விருப்பமான ஒரு சின்னத்திற்கு வாக்காளர் முதலில் அடையாளமிட வேண்டும்.

வாக்குச் சீட்டின் கீழ்ப்பகுதியில் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விருப்பு இலக்கங்களும், அதன் அருகே இரண்டு வெற்றுக்கூடுகளும் காணப்படும். இதில் ஒரு வாக்காளர் மூன்று விருப்பு வாக்குகளை அளிக்க முடியும். மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கோ அல்லது இரண்டு விருப்பு வாக்குகளை ஒருவருக்கும் மற்றையதை இன்னொருவருக்கோ அல்லது மூன்று விருப்பு வாக்குகளையும் மூன்று வெவ்வேறு வேட்பாளர்களுக்கோ செலுத்த முடியும்.

முதலில் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்திற்கு வாக்கொன்றை செலுத்திவிட்டு அதன் பின்னர் விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதே பொருத்தமானது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க-ஐ)

## தமிழீழ சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ரீதியாக நோய்த் தொற்றுக்களுக்கான கிருமிகள் குறித்த ஆய்வுகள் நடைபெறுவது போன்று தமிழீழ சுகாதார சேவையின் பூச்சியியல் ஆய்வுப் பிரிவும் முடிந்த அளவிலான பணிகளை மேற்கொள்ளும் என்றார் அவர். ஆய்வுப் பிரிவின் பொறுப்பாளர் ஈழச்செல்வன், சுதேச மருத்துவ சபைப் பொறுப்பாளர் மருத்துவர் தேவா, மருத்துவர் திருலோகமூர்த்தி, தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்வாணன், மருத்துவர் கணேசன், தமிழீழ சுகாதார சேவையின் இணைப்பாளர் குணாளன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (ஐ)

## இராணுவத்தினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானச் செயலகம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் உதவி கோரியிருந்தது. அதனையடுத்துப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று உரிய ஏற்பாடுகளைக் கண்காணிப்புக் குழு மேற்கொண்டது:

கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து புலிகளின் சமாதானச் செயலக வாகனத்தில், காயமடைந்த போராளியும் அவரது உறவினர்களும் மற்றுமொரு போராளியும் முகமாலையை வந்தடைந்தனர். அங்குள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில் வைத்து அவர்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் ஜோன் தலைமையிலான மூவர் கொண்ட குழுவினர் பொறுப்பேற்றனர். போராளிகளின் வாகனத்திற்கு அவர்கள் வழித்துணையும் வழங்கினர்.

முகமாலை சோதனை நிலையத்தில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலை வரையில் போராளியை ஏற்றி வந்த வாகனத்திற்கு பவள் கவச வாகனம் சகிதம் இராணுவத்தினர் கடும் பாதுகாப்பு வழங்கினர்.

நேற்று மதியம் போராளி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் அவருக்கான பாதுகாப்பு விலக்கப்பட்டது. (ஐ-க-3-15)

## மரண அறிவித்தல்

### செல்லையா இரத்தினசிங்கம்

### (அப்பையா)



சுதுமலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (17.03.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வினாசித்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசையா, அழகம்மா, நவரத்தினம் மற்றும் சரஸ்வதி, வேதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேதீஸ்வரன், இராசேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் சிறிதாஸ், சறோஜாதேவி, மனோகரன் (உதயன் ஊழியர்), மகேந்திரன் (செல்வம்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும் பத்மாதேவி, சிவகுமார் (அண்ணா தொழிலக விற்பனைப் பிரதிநிதி), கலாராணி, கண்ணகி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிநாத், தவஅமுதீசன், தர்சனா, தனுஷன், மதுசன், விதுஷன், மகிள்ராஜ், மதுராஜ், மதுசாலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2006) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய். (48234)(30)

தகவல்:
குடும்பத்தினர்.


UNIT EDUCATION

100% செய்முறைப் பயிற்சியுடன்

Hardware & Networking

16/1, Killnar Lane, Jaffna.

System Engineer

வெளிநாடுகளில் அதிஉயர் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் சர்வதேசதர கற்கைநெறிகள்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாக தொடர்புகொள்க

MCS 324, Palaly Road, Jaffna.

MCP MCSE MCSA


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




முதலாம் தவணைப் பரீட்சை தரம் 11

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

## வணிகக்கல்வியும் கணக்கீடும்


திரு.R.ஜெனதன் *B.B.A. (Hons)* - திருமலை
தி/ புனிதமரியாள் மகளீர் கல்லூரி (தேசியப் பாடசாலை)

ஒரு மணித்தியாலம்

### பகுதி I

★ 1-40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1)(2)(3)(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. உற்பத்தியாக்கப்பட்ட பண்டங்கள் நுகர்வோரை சென்றடையும் செயற்பாடு
   1. வணிகம் 2.வர்த்தகம்
   3.வியாபாரம் 4.நுகர்வு
2. வணிகம் ஒன்றின் தொழிற்பாடாக அமையாதது
   1.உற்பத்தி 2.நிர்வாகம்
   3.நுகர்வு 4.கொள்வனவு
3. பொருள் அல்லது சேவை ஒன்றிற்கான விலையை செலுத்துவதற்கான நுகர்வோரின் விருப்பமும் ஆற்றலும் எவ்வாறு அழைக்கப்படுகிறது
   1.கேள்வி 2.நுகர்வு
   3.கொள்வனவு 4.உற்பத்தி
4. வணிகர் ஒருவரினால் எளிதில் கட்டுப்படுத்தக் கூடிய ஒருசூழல் காரணி
   1.சனத்தொகை 2.ஊழியர்கள்
   3.வட்டிவீதம் 4.விலைமட்டம்
5. கைத்தொழில் பண்டம் எனும் தொடரை விளக்கும் மிகப்பொருத்தமான கூற்றை தெரிவு செய்க
   1. மனித தேவைகளை திருப்திப்படுத்த நுகரப்படும் பண்டங்கள்
   2. நுகர்வுப் பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பண்டம்
   3. நீண்டநேரத் தெரிவின் பின் கொள்வனவு செய்யப்படும் பண்டம்
   4. விலை கூடிய பண்டங்கள்
6. பின்வருவனவற்றுள் மூலதனச்சந்தையில் காணப்படும் ஆவணம்
   1.திறைசேரி உண்டியல்கள் 2.வைப்புச் சான்றிதழ்கள்
   3.திறைசேரி முறிகள் 4.மேற்கூறிய அனைத்தும்
7. ஒருவர் ரூபா 100 இனை செலுத்தி ஒரு புத்தகம் ஒன்றினை கொள்வனவு செய்தார் இச் செயற்பாடு பணத்தின் எத்தொழிற்பாட்டை குறிக்கும்
   1. பெறுமானத்திரட்டு தொழிற்பாடு
   2. பெறுமான அளவு கருவித் தொழிற்பாடு
   3. கடன் கருவித் தொழிற்பாடு
   4. பரிமாற்று ஊடகத் தொழிற்பாடு
8. முதல்வருக்காக விற்பனையில் ஈடுபடும் போது பொருள் தொடர்பான பூரண உரிமையையும், பொறுப்பையும் ஏற்பவர்
   1. தரகர் 2. பொறுப்புத் தரகர்
   3. காரணிகர் 4. ஏலவர்
9. தொழில்பிரிப்பின் பிரதான பெறுபேறு
   1.தனியாள் சிறப்புத் தேர்ச்சி 2.நிறுவன சிறப்புத் தேர்ச்சி
   3.பிரதேச சிறப்புத் தேர்ச்சி 4.மேற்கூறிய அனைத்தும்
10. தொழிற்சாலை அமைவிடம் ஒன்றை தேரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளத் தேவையில்லாத காரணி
    1.மூலப்பொருள் கிடைப்பனவு 2.போக்குவரத்து
    3.தொழில்லாளர் கிடைப்பனவு 4.மூலதனம்
11. பின்வருவனவற்றுள் அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்பு வங்கி
    1.இலங்கை வங்கி 2.மக்கள்வங்கி
    3.தேசிய சேமிப்பு வங்கி 4.ஹற்றன் நஷனல் வங்கி
12. பின்வருவனவற்றுள் கைமாற்றப்பட முடியாத குறுக்கு கோடிட்ட காசோலை




1. 2. 3. 4.

13. இறக்குமதிப் பண்டங்கள் சுங்கப்பண்டகசாலையில் பின்தனிக்கப்பட்டு மீள்பொதி செய்யப்பட்டு இன்னொரு நாட்டுக்கு விற்பனை செய்யப்படுதல்
    1.ஏற்றுமதி வியாபாரம் 2. இறக்குமதி வியாபாரம்
    3.இருபக்க வியாபாரம் 4.இறக்கி ஏற்றல் வியாபாரம்
14. போக்குவரத்து முறையின் ஓர் அம்சமாக அமையாதது
    1.கட்டணம் 2.இயலளவு
    3.தரிப்பு நிலையம் 4.பாதுகாப்பு
15. பின்வருவனவற்றுள் வாய்மொழி மூலமான தொடர்பு சாதனமாக அமைவது
    1.இணையம்(**Internet**) 2.மின் அஞ்சல்(**E-mail**)
    3.கூட்டங்கள் 4.சுற்றறிக்கைகள்
16. இலாபம் பெறும் நோக்குடன் பொதுவான முயற்சியில் ஈடுபடக்கூடிய நபர்களுக்கிடையிலான உறவு எதுவாக வரையறுக்கப்படுகிறது
    1.கூட்டுறவு 2.பங்குடமை
    3.மக்கள் கம்பனி 4.அரசத் திணைக்களம்
17. வரையறுத்த தனியார் கம்பனியுடன் தொடர்புடாத ஆவணம் எது?
    1.அமைப்பு புறவிதி 2. அமைப்பு அகவிதி
    3.முன்விபரணம் 4.உருவாக்கப்பத்திரம்
18. பின்வருவனவற்றுள் சாதாரான பங்குதாரருடன் ஒப்பிடும் போது முன்னுரிமை பங்குதாரர்களுக்கு கிடைக்கும் நன்மை
    1. வாக்களிக்கும் உரிமை
    2. கம்பனி அதிக இலாபம் உழைக்கும் காலப்பகுதியில் கூடுதலான இலாபம் பெற முடியும்
    3. இயக்குனர் சபையில் பங்கெடுக்கும் வாய்ப்பு
    4. நிலையான பங்குலாபம் ஒன்றை பெறமுடிதல்
19. வரையறுத்த தனியார் கம்பனிக்கும் வரையறுத்த பொதுக்கம்பனிக்கும் இடையிலான வேறுபாடாக அமைவது
    1.பங்கு மூலதனம் 2.சட்ட ஆளுமை
    3.வரையறுத்த பொறுப்பு 4.பங்குகைமாற்றம்
20. பின்வருவனவற்றுள் நுகர்வோரின் உரிமையொன்றாக அமையாதது
    1.சமூகம் தொடர்பான அக்கறை 2.தெரிவு செய்தல்
    3.தகவல் பெறுதல் 4.கருத்தினை வெளிப்படுத்தல்
21. சேமிப்புக்களை முதலீடாக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரு பிரதான காரணிகள்
    1.பாதுகாப்பும்-வருமானமும் 2.பாதுகாப்பும்-திரவத்தன்மையும்
    3.வருமானமும்-திரவத்தன்மையும் 4.வருமானமும்-உரிமையாளராகும் வாய்ப்பு
22. பின்வருவனவற்றுள் முறைமையான குறுங்கால முதலீட்டு மூலமாக அமைவது
    1.பங்குகள் 2.திறைசேரி உண்டியல்கள்
    3.திறைசேரிமுறிகள் 4.தொகுதிக் கடன்கள்
23. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல் படுத்தப்பட்ட மிகவும் திரவத்தன்மை வாய்ந்த சில கம்பனிகளின் விலை மட்டங்களை அளவிடப்பயன்படும் சுட்டி
    1.அனைத்துப் பங்கு விலைச் சுட்டி 2. மொத்த வருவாய்ச் சுட்டி
    3.நுகர்வோர் விலைச்சுட்டி 4.மிலங்கா விலைச்சுட்டி
24. கொழும்பு பங்குவர்த்தனை நிலையத்தின் பிரதான தொழிற்பாடு
    1.முதனிலைச் சந்தை விவகாரங்கள் 2.இரண்டாம் தரச் சந்தை விவகாரங்கள்
    3.ஆரம்ப பொது வழங்கல் தொடர்பான விவகாரங்கள் 4.வரையறுத்த மக்கள் கம்பனியின் பங்குவழங்குடன் தொடர்புடைய விவகாரங்கள்
25. ஒரு உற்பத்திப் பொருள் மீதான (**SLS**) குறி எதனைக் குறித்து நிற்கிறது
    1.உற்பத்திப் பொருள் குறித்த நியமமென்றுக்கு அமைவானது என்பதை
    2.உற்பத்திப் பொருளின் விலை நியாயமானது என்பதை
    3.உற்பத்திப்பொருள் காலவதியாகவில்லை என்பதை
    4.உற்பத்திப் பொருள் நுகர்வோரின் சுவைக்கு அமைவானது என்பதை
26. யூரோ நாணயத்தை பயன்படுத்தாத ஒரு ஐரோப்பி நாடு எது
    1.இத்தாலி 2.சுவீடன்
    3.பிரித்தானியா 4.நெதர்லாந்து
27. பின்வருவனவற்றுள் தவறான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது
    1.மூலதானம்+சொத்துக்கள் =பொறுப்புக்கள்
    2.மூலதானம்+பொறுப்புக்கள்=சொத்துக்கள்
    3.சொத்துக்கள்+மூலதானம்=பொறுப்புக்கள்
    4.மூலதானம்+வருமானங்கள்+பொறுப்புக்கள்=சொத்துக்கள்+செலவுகள்
28. மூலதனம் குறைவடைகிறது சொத்துக்கள் குறைவடைகிறது எனும் தாக்கத்தை புலப்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது
    1. மூலதனம் இட்டது ரூபா7500
    2. உரிமையாளர் சொந்த தேவைக்கு பற்றிய பொருள்களின் கொள்விலை ரூபா 4000
    3.ரூபா 10000இற்கு பண்டங்கள் கொள்வனவு செய்தது
    4. மேற் கூறிய எதுவுமன்றி
29. சொத்துக்கள் பொறுப்புகளின் கூட்டுத்தொகையில் மாற்றம் எதுவையும் ஏற்படுத்தாத கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க
    1. கடனுக்கு பண்டங்கள் கொள்வனவு ரூபா 18000
    2. வங்கிக் கடன் பெற்றது ரூபா 50000
    3. தளபாடம் கொள்வனவு ரூபா 128000
    4. உரிமையாளர் பற்று ரூபா 4000
30. செலவுத் தாள் மூல ஆவணமாக பயன்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல் எது?
    1.கடன் கொள்வனவு 2.கடன் விற்பனை
    3.வெளித்திரும்பல் 4.உட்திரும்பல்
31. உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக நிறுவனத்திலிருந்து பற்றிய காசு ரூபா 300 எனும் கொடுக்கல் வாங்கல் பதியப்படும் முதன்மை ஏடு எது
    1.கொள்வனவு நாளேடு 2.விற்பனை நாளேடு
    3.பொது நாட்குறிப்பேடு 4.காசேடு
32. அதிக திரவத்தன்மையுடைய சொத்துக்களிலிருந்து குறைந்த திரவத் தன்மை உடைய சொத்துக்களின் வரிசையாக அமைவது
    1. காசு மீதி, வங்கி மீதி, கடன்பட்டோர், இருப்புக்கள்
    2. இருப்புக்கள், கடன்பட்டோர் வங்கிமீதி, காசு மீதி
    3. இருப்புக்கள், கடன்பட்டோர்,காசுமீதி,வங்கிமீதி
    4. வங்கி மீதி, இருப்புக்கள், காசுமீதி, கடன்பட்டோர்
33. சில்லறைக்காசாளருக்கு கட்டுநிதியாக ரூபா 3200 வழங்கப்பட்டதுடன் பிரதமகாசாளரால் மீளளிக்கப்படும் தொகை
    1.ரூபா 3000 2.ரூபா 200 3.ரூபா 6200 4.ரூபா 3200
34. காசுக் கழிவு அனுமதிக்கப்படுவது
    1.குறித்த காலப்பதவிக்கு முன்னதாக மேற்கொள்ளும் கொடுப்பனவின் போது
    2.கடன் அடிப்படையில் பண்டங்களை கொள்வனவு செய்யும் போது
    3.காசுக் கொடுப்பனவின் போது
    4.ஒரே தடவையில் பெருமளவான தொகைக்கு கொள்வகவு செய்யும் போது.
35. ஒரே நேரத்தில் முதன்மை ஏடாகவும் பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படுவது
    1. கொள்வனவு ஏடு 2.பொதுநாட்குறிப்பு 3.காசேடு 4.சில்லறைக் காசேடு
36. காசோலை மூலமான கொடுப்பவுகளை மேற்கொள்ள உதவும் வங்கிக் கணக்கு
    1.சேமிப்புக் கணக்கு 2.நடைமுறைக் கணக்கு
    3.கால வைப்புக் கணக்கு 4. மகளிர் பொற் கணக்கு
37. காசேட்டின்படி வங்கி மீதியும் வங்கி கூற்றின்படி வங்கிமீதியும் வேறுபடுவதற்கான கால வேறுபாட்டுக் காரணி
    1.நேரடி வைப்பு 2. மறுக்கப்பட்ட காசோலை
    3.வங்கி அறவிடு 4.தேறாத காசோலை

38. வங்கிக் கூற்றில் இடம்பெறாத உருப்படி
1.வங்கிக் கட்டணம் 2.நேரடி வைப்பு
3. வசூலிக்கப்பட்ட காசோலை 4.மாற்றப்படாத காசோலை

39. காசேட்டின் படி வங்கி மேலதிகபற்று மீதி ரூபா5000 உள்ள போது நேரடி வைப்புக்கள் ரூபா 7800 ஆக இருப்பின் வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி
1.ரூபா 2800 சாதகமான மீதி 2.ரூபா 2800 பாதகமான மீதி
3.ரூபா 12800 சாதகமான மீதி 4.ரூபா 12800 பாதகமான மீதி

40. ஐந்தொகை குன்றினைத் தயாரிக்கும் போது ஐந்தொகையில் வணிகத்தின் பெயரை எழுதிக் கொள்வது வழக்கம் இந்த நடைமறையிலான கணக்கீடு எண்ணக் கரு
1. பண அளவிட்டு எண்ணக் கரு 2.தொழில் முழுமைக் கூற்று எண்ணக்கரு
3.கிரய எண்ணக்கரு 4.கால அளவு எண்ணக்கரு

(**1x40** = 40புள்ளிகள்)

## வணிகக் கல்வியும் கணக்கீடும் — இரண்டு மணித்தியாலம்

- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக
- பகுதி 1இலுள்ள முதலாம் வினாக்கும் பகுதி 2 அ பகுதி ஆ ஆகிய ஒவ்வொன்றிலிமிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து நான்னு வினாக்களுக்கு விடைதருக

### பகுதி 1

எல்லா வினாக்களுக்கம் விடை தருக

1. வர்த்தகத்துக்கும் வியபாரத்துக்கும் இடையிலான தொடர்பை சுருக்கமாக விளக்குக.
2. (அ) உற்பத்தியின் வகைகளை பெயரிடுக?
(ஆ) பயன்பாட்டின் நோக்கின் அடிப்படையில் பண்டங்களை எவ்வாறு வகைப்படுத்துவீர்?
3. பொருத்தமான உதாரணங்களை தந்து பொருள்களையும் சேவைகளையும் வேறுபடுத்திக காட்டுக?
4. (அ) தனிநபர் சேமிப்பின் இரு குறிக்கோள்களை குறிப்பிடுக
(ஆ) முறைமையான குறுங்கால முதலீட்டு வழிகள் இரண்டைக் குறிப்பிடுக?
5. (அ) காசோலை மூலமான கொடுப்பனவிற்கான மூல ஆவனம் எது?
(ஆ) காசோலையொன்றுக்கு வங்கி பணம் வழங்க மறுக்கும் இரு சந்தர்ப்பங்களை குறிப்பிடுக?
6. (அ) வணிகத்தின் புதிய போக்குகள் இரண்டை குறிப்பிடுக?
(ஆ) இலத்திரனியல் வணிகம் (**E-Commerce**) என்பதை வரையறுக்குக
7. (அ) வங்கிக் கூற்றில் காணப்படும் மூன்று உருப்படிகளை பெயரிடுக?
(ஆ) நிலையான கட்டளை என்றால் என்ன?
8. கணக்கீட்டு எண்ணக்கருக்கள் இரண்டினை பெயரிட்டு விளக்குக?
9. (அ) பணச்சந்தைக் கருவிகள் இரண்டைக் குறிப்பிடுக?
(ஆ)பணச்சந்தையில் செயற்படும் நிறுவனங்கள் இரண்டினைப் பெயரிடுக?
10. (அ) வணிகம் ஒன்றின் நான்கு தொழிற்பாடுகளை பெயரிடுக?
(ஆ) வணிகம் ஒன்றிற்கான வளங்களைப் பெயரிடுக?

(**2x10=20** புள்ளிகள்)

### பகுதி II "அ" - வணிகக்கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைத்தருக.)

2. (i) பொருத்தமான உதாரணங்களைத் தந்து தேவைகளையும் விருப்பங்களையும் வேறுபடுத்துக?
(ii) (அ)'கேள்வி' (**Demand**) என்பதை வரையறுக்குக?
(ஆ) பொதி செய்யப்பட்ட பொருள் ஒன்றை கொள்வனவு செய்யும்போது நீர் எவ்விடயங்களை கவனத்தில் கொள்வீர்?
(iii)(அ) வணிகத்தைப் பாதிக்கும் புறச்சூழல் காரணிகள் நான்கினை பெயரிடுக?
(ஆ) வணிக ஒழுக்காறு (**Businessethic**) என்பதை சுருக்கமாக விளக்குக?
(iv)(அ) பங்குடமை ஒன்றின் நான்கு பிரதி கூலங்களை பெயரிடுக?
(ஆ) "வியாபார அங்கீகாரம் பெற்ற கம்பனிகள்" என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(v) (அ) 1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு அமைய வரையறுத்த கம்பனி ஒன்றை பதிவுச் செய்வதற்கு தேவைப்படும் ஆவணங்களைக் குறிப்பிடுக?
(ஆ)அவற்றுள் ஒன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை எனக் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

3. (i) (அ) பொது உடமையின் (**Public Ownerships**) மூன்று அனுகூலங்களைத் தருக?
(ஆ) பொது உடமைகளின் வினைத்திறனின்மைக்கு ஏதுவான இரு காரணங்களை எழுதுக?
(ii) (அ) பண்டங்களை கொண்டு செல்வதற்கு பொருத்தமான போக்குவரத்து சாதனம் ஒன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய நான்கு விடயங்களை குறிப்பிடுக?
(iii)(அ) இலங்கையில் சில்லறை வியாபாரத்தில் காணப்படும் புதிய போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக?
(ஆ) "சுமைச் சீட்டு" என்ற பதத்தை வரையறுக்க?
(iv)காப்புறுதித் தத்துவங்களை பெயரிட்டு, அவற்றுள் ஒன்று பற்றி சிறுவிளக்கம் எழுதுக?
(v) மத்திய வைப்பு முறைமையின் நான்குத் தொழிற்பாடுகளை எழுதுக?

4. (i) சேமிப்பு வைப்புக்களுக்கும் நிலையான வைப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக?
(ii) திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதைவிட வரையறுத்த பொதுக் கம்பனியின் சாதாரணபங்குகளை கொள்வனவு செய்வதால் கிடைக்கும் அனுகூலங்கள் எவை?
(iii)(அ) தொடர்பாடல் சாதனம் ஒன்றை தெரிவு செய்யும்போது எக்காரணிகளை கவனத்தில் கொள்வீர்?
(ஆ) அகத்தொடர்பு சாதனங்கள் மூன்றினைப் பெயரிடுக?
(iv) தனியார் வியாபார அமைப்புடன் ஒப்பிடுகையில் கூட்டுறவு அமைப்பில் காணப்படும் சிறப்பியல்புகளை குறிப்பிடுக.
(v)(அ) நிதிக்குத்தகை, தொழிற்பாட்டுக்குத்தகையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
(ஆ) குத்தகைச் சேவை மூலம் உற்பத்தியாளர் ஒருவர் அடைந்துகொள்ளும் நன்மைகள் எவை?

(10 புள்ளிகள்)

### பகுதி II "ஆ"

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக?

5. "சயந்தன்" எனும் தனிவியாபாரியின் 2006 பெப்ரவரி மாதத்துற்கான தகவல்கள் உமக்கு கீழே தரப்படுகின்றன.

01 பெப்ரவரி 2006 இல் மீதிகள்

| | |
|---|---|
| காசு | ரூபா 32000 |
| 10% வங்கிக்கடன் | ரூபா 175000 |
| தளபாடம் | ரூபா 200000 |
| காணி கட்டிடம் | ரூபா 500000 |
| இருப்புக்கள் | ரூபா 50000 |

2006 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | |
|---|---|
| பெப்ரவரி 03 விற்பனைகள் | ரூபா 132000 |
| 07 கொள்வனவுகள் | ரூபா 78000 |
| 09 வங்கியில் வைப்புச்செய்தது | ரூபா 12000 |
| 11 விற்பனைகள் (காசோலை பெறப்பட்டது) | ரூபா 30000 |
| 15 தளபாடம் கொள்வனவு | ரூபா 72000 |
| 18 வாடகை செலுத்தியது | ரூபா 3000 |
| 20 சம்பளம் கொடுத்தது (காசோலை மூலம்) | ரூபா 4500 |
| 23 வங்கிகடன் பெற்றது | ரூபா 250000 |
| 24 பெற்ற காசோலை வைப்பிலிடப்பட்டது ......................... | |
| 25 விற்பனைகள் | ரூபா 79000 |
| 27 பற்று | ரூபா 4000 |

28 மீகைகவுள்ள காசு முழுவதும் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

நீர் பின்வருவனவற்றை தயாரிக்குமாறு கேட்கப்படுகிறீர்.
1) 2006 பெப்ரவரி மாதத்திற்கான இரட்டை நிரல் காசேடு.
2) பொது நாட்குறிப்பேடு
3) பேரேட்டுக் கணக்குகள் (**T** வடிவம்)
4) பரீட்சை மீதி.

(10புள்ளிகள்)

6. (i) 'திவாகரன்' வணிகத்தின் நடைமுறைக் கணக்கில் 2006 ஜனவரி 1 இல் ரூபா 66000 மீதியை வங்கிக் கூற்று காட்டியது. 2006 ஜனவரி மாதத்தில் வங்கிகூற்றில் பதிவிடப்பட்ட உருப்படிகள் உமக்கு கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நேரடி வைப்புக்கள் | ரூபா 13500 |
| வசூலித்த காசோலைகள் | ரூபா 12500 |
| அறவிட்ட கட்டணங்கள் | ரூபா 1500 |
| வரவு வைக்கப்பட்ட காசோலைகள் | ரூபா 3000 |

மேற்படி தகவல்களைக் கொண்டு 2006 ஜனவரி 31இல் வங்கியில் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றினை தயார் செய்க. (மாதிரி வடிவத்தைப் பின்பற்றுக) (4புள்ளிகள்)

(ii) அ) காசேட்டின்படி வங்கி மீதியும் வங்கிக்கூற்றில் காணப்படும் வங்கி மீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள் எவை? (1புள்ளி)
(ஆ) பிரதர்சன் வணிக நிறுவனத்தின் காசேட்டிற்கு அமைய 2005 டிசெம்பர் 31இல் வங்கிநிரலின் வரவு மீதி ரூபா 2800 ஆகும். அத்திகதியில் வங்கிக் கூற்று ரூபா 2900 எனும் மீதியைக் காட்டியது இவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு.
(i) வைப்புச் செய்யப்பட்ட போதும் வங்கிக்கூற்றில் செலவு வைக்கப்படாதிருந்த காசோலைகளின் பெறுமானம் ரூபா 3000
(ii) வைப்புச் செய்யப்பட்ட பின்னர் வங்கியால் மறுக்கப்பட்ட ரூபா 1200 பெறுமானம் உடைய காசோலைகள் காசேட்டில் பதியப்படவிலலை.
(iii) வணிகத்தின் சார்பில் வங்கிக்கு நேரடியாக கிடைத்த வைப்புக்கள் ரூபா 14500 காசேட்டில் பதியப்படவில்லை.
(iv)வங்கிக்கூற்றில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 400 வங்கிக் கட்டணம் காசேட்டில் பதியப்படவில்லை.

நீர் செய்யவேண்டியது.
1) 2005 டிசெம்பர் 31இல் இருந்தபடி காசேட்டை சீராக்குதல்.
2) சீராக்கிய மீதியை வங்கிக்கூற்றிலுள்ள மீதியுடன் இணங்கச் செய்தல்.

(5 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

7. (i) (அ) வியாபாரக் கழிவுக்கும் காசுக்கழிவுக்கும் இடையிலான வேறுபாடு யாது? (1புள்ளி)
(ஆ) "சிறுசெலவுக் காசுக் கட்டு நிதி "முறைமை" என்பதை சுருக்கமாக விளக்குக? (1புள்ளி)
(இ) பின்வரும் தகவல்களைக் கொண்டு றமேஸ் வணிகத்தில் 2006 டிசெம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகையைத் தயாரிக்குக?

ரூபா இல்

| | |
|---|---|
| மூலதனம் | 37700C |
| காணி | 200000 |
| கட்டடங்கள் | 60000 |
| முதலீடுகள் நிலையான வைப்பு | 100000 |
| 10% வங்கிக் கடன் | 35000 |
| காசு மீதி | 66500 |
| கடன்பட்டோர் | 34500 |
| இருப்புக்கள் | 39000 |
| கடன் கொடுநர் | 88000 |

(3 புள்ளிகள்)

ii) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தரப்படும் சமன்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை பொருத்தமான நிரலில் எண்களுடன் அதிகரிப்பு (+) குறைவு (-) எனற அடையாளங்களை பயன்படுத்திக்காட்டுக.
1) உரிமையாளர் வணிகத்தில் ரூபா 70000 பணத்தையும் ரூபா 40000 பெறுமதியான தளபாடங்களையும் முதலீடு செய்தார்.
2) ரூபா 50000 கடனுக்கு பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
3) ரூபா 125000 மக்கள் வங்கியிலிருந்து கடனாக பெறப்பட்டது.
4) ரூபா 22000 கொள்விலையான பண்டங்கள் ரூபா 25000 இற்கு விற்கப்பட்டது.
5) ரூபா 450 வங்கிக் கடன் வட்டி செலுத்தப்பட்டது.

மூலதனம் +பொறுப்பு +தளபாட உபகரணங்கள் +இருப்பு+காசு

(5 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

**அன்பு மாணவர்களே!**

**மேலேயுள்ள பயிற்சி மாதிரி வினாத்தாள்களை செய்து பயிற்சி பெற்று உயர்ந்த புள்ளிகளைப்பெற கல்விச்சுடர் உங்களை வாழ்த்துகிறது.**